
உ
சிவமயம்



அமரர். திருமதி.கமலாம்பிகை லோகிதராஜா

அவர்களின்

31ஆம் நாள் நினைவாக வெளியிடப்பட்ட

# கமல நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்.

# திருமதி. கமலாம்பிகை லோகிதராஜா

அவர்களின்

## 31ம் நாள் நினைவாக வெளியிடப்பட்ட

# கமலநூல்

24-10-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அன்னை மடியில் :
**12-05-1939**

இறைவன் அடியில் :
**24-09-2015**

# அமரர். திருமதி. கமலாம்பிகை லோகிதராஜா

(ஓய்வு பெற்ற ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர்)

## திதி வெண்பா

மன்மத ஆண்டு புரட்டாதி வளர்பிறை சித்த யோகத்தில்
ஸர்வ ஏகாதசி திதி திருவோண நட்சத்திரம் கூடிய நன்னாளில்
கமலாம்பிகை தம் மண்ணுலக வாழ்வை நீத்து
அரன் அவன் அடி சேர்ந்தனரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பாண்டிருப்பின் மலராகி
பவித்திரமாய் இணை சேர்ந்து
தாயாகித் தந்தையுமாகி
அன்போடு இனம் கூட்டி
அறிவு தந்து ஆளாக்கி
இன்முகம் காட்டி
இடர் களைந்து
பல்துறையில் தடம் பதித்து
பத்தும் பதியமும் பதிப்பிட்டு
பேர் சொல்ல வாழ்ந்து விட்ட
கமலாம்பிகை லோகிதராஜா
மறுமையில் நித்திய அமைதி பெற
இறைவனுக்கு இந்நூல்
சமர்ப்பணம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டவர் உறையும் பாண்டிருப்பு எனும் சிறிய கிராமத்தில் சாமித்தம்பி அழகுசுந்தரம் தம்பதிகளின் சீமந்த புதல்வியாக பிறந்தவர் எமது அன்னை கமலாம்பிகை அவர்கள் பிறந்து சில நாட்களிலேயே தனது அன்னையை இழந்த இவர் தந்தை, சிற்றன்னை, அம்மப்பா, அம்மம்மா ஆகியோரின் அரவணைப்பில் ஆளாகினார். தொடர்ந்த காலங்களில் மீனாம்பிகை, விமலாம்பிகை பாலசண்முகம், கதிர்காமநாதன், அருளாம்பிகை, செந்தில்நாதன் ஆகியோரை சகோதர சகோதரிகளாகப் பெற்றார்.

கல்முனை கார்மேல் பெண்கள் பாடசாலையிலும் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையிலும் ஆங்கிலப் பிரிவில் தனது கல்வியை கற்ற இவர் தனது தாயாரின் வழியில் தன் மூத்தோரைப் பின்பற்றி தானும் ஆசிரியராக வருவதற்காக மட்டக்களப்பு ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் 1959ம் ஆண்டு சேர்ந்து 1960ல் தமிழ் பயிற்றப்பட்ட ஆசிரியராக தனது ஆசிரியப் பணிக்கு முகவுரை கொடுத்தார்.

1963ம் ஆண்டு மட்டக்களப்பைச் சேர்ந்த குணரெத்தினம் நாகரெத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் லோகிதராஜாவை மணம் புரிந்து இல்லற வாழ்க்கையை மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பில் சீராக ஆரம்பித்தார். நாகராஜா, மாணிக்கவாசகர் என்று இரு மைத்துனரையும் உறவாகப் பெற்றார். இல்வாழ்க்கை சிறக்க சோபனா, சுபோசனா, றுக்சனா, பிரசாந் என்ற நான்கு பிள்ளைகளையும் பெற்று பாண்டிருப்பில் இன்புடன் வாழ்ந்து வந்தார். 1977ம் ஆண்டு விபத்தொன்றில் தன் கணவரை பதினான்கு வருட மண வாழ்வின் பின் இழந்த இவர் தன் பிள்ளைகளுக்காக தலை நிமிர்ந்து இடர்களைந்து வழிகாட்டியாக தனது வாழ்வைத் தொடர்ந்தார்.

வாழ்க்கைப் பாதையில் மோகனகரன், விவேகானந்தராஜா, வரதசுந்தரம், அஜந்தாகுமாரி என்ற அன்பு மருமக்களையும் அபிநயன், கேசரா, மதுஷிக்கா, விபுஷா, பிரவீணா, சந்யா, கீர்த்தனா, சயந்தனா, லெட்ஷிகா, என்று ஆசைப் பேரப்பிள்ளைகளையும் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளைகளுக்காக அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்கு சென்று பேத்திகளோடு தனது நேரத்தை செலவிட்டது மட்டுமன்றி கொழும்பு நகரத்திற்கும் சென்று தங்கியிருந்து பேரர்களின் மேற்படிப்புக்காக அயராது பாடுபட்டார். பெறா மக்களிடமும் மிகுந்த அன்புடையவர்.

1980ம் ஆண்டில் இவரது உறவினர் வயந்தராசபிள்ளை சுப்பிரமணியம் ஆசிரியரின் ஆலோசனைப்படி G.A.Q. பரீட்சைக்கான புத்தகங்களை பொழுதுபோக்காக வாசிக்க ஆரம்பித்தார். இது தமிழ் இலக்கியத்தில் திறமை பெற்ற இவரது தந்தையாரின் மூலம் ஏற்கனவே இவர் பெற்றிருந்த இலக்கிய அறிவைப்புடம் போட்டது. இதுவே பின்னாளில் இவரை ஒரு இலக்கியவாதியாக மாற்றியது என்பது மிகையன்று.

G.A.Q. பரீட்சையில் திறமையான சித்திகளைப் பெற்றதனாலும் ஆங்கிலம் ஒரு பாடமாக இருந்ததனாலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தனது இளங்கலைப் படிப்பைத் தொடருவதற்கு இவருக்குக் கிடைத்த பாதையைப் பலமாகப் பற்றிக்கொண்டு விசேட சித்திகளுடன் 1985ம் ஆண்டு பல்கலைப் பட்டதாரியாக வெளிவந்தார். தொடர்ந்த நாட்களில் தன்னை படிப்படியாக உயர்த்தி கமு/கார்மேல் பற்றிமா கல்லூரியில் தரம்-01 அதிபராகவும் கல்முனைக்கல்வி வலயத்தில் ஆங்கில உதவிக் கல்வி அதிகாரியாகவும் சேவையாற்றி 1996ம் ஆண்டு அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்.

வாசிப்பு, இலக்கியம், விமர்சனம், கட்டுரை ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடுடைய இவர் பல சமயப் பிரசங்கங்கள், சிறுவர் / பெண்கள் துஷ்பிரயோகம், பெண்ணியம் பற்றி பல்வேறு உரைகளையும் ஆற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. கல்முனைப் பிரதேச அவைக் காற்றுக்கலைகள், ஆறாம் திணை சொற்கள் என்பன இவர் எழுதிய ஆய்வுக்கட்டுரைகளில் சிலவாம். கண்ணகி அம்மனையும் கிரேக்க பெண் தெய்வமொன்றையும் ஒப்பிட்டு இவர் ஆற்றிய சிற்றுரையைக் கேட்ட கொழும்பு தமிழ்ச்சங்கத்தினர் தங்களது ஒரு கூட்டத்தில் அந்த சிற்றுரையை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் கல்முனை கலை இலக்கிய நண்பர்கள் அமைப்பின் தலைவராகவும் பணிபுரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012ம் ஆண்டில் இவர் எழுதி வெளியிட்ட பத்தும் பதியமும் என்ற நூல் பாண்டிருப்பைப் பற்றிய ஒரு ஆய்வு நூலாக அவரது கிராமத்தின் வாழ்க்கை முறைகளையும் வழிபாட்டு முறைகளையும் தாங்கி வந்தது. இந்த புத்தகத்திற்காக கலாசார அமைச்சின் பல்துறை விருதினையும் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் அளித்த தமிழியல் விருதினையும் 2013ம் ஆண்டில் பெற்றார்.

இலங்கை அரசால் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்ட இவர் தனது வாழ்நாளில் சிறந்த பிரஜைக்குரிய சாமஸ்ரீ தேசகீர்த்தி விருதும் பெற்றவர் ஆவார். இத்தனை சிறப்புகளையும் கொண்டாலும் இயல்பிலே சாதாரணமாய் தான் பிறந்த ஊரிலே அவருக்கு மூத்தவர்களால் மூத்தவள் என்றும் இளையவர்களால் மூத்தக்கா என்றும் அன்பாக அழைக்கப்பட்டார். வாழ்வில் துயரங்கள் வந்த போதும் தன்னம்பிக்கையுடன் எதிர்நீச்சல் இட்டு அவைகளைத் தனது எதிர்காலத்திற்கு படிகளாக மாற்றியவர். எந்த ஒரு சிறிய காரியத்தையும் அழகாக திட்டமிட்டு அதனை மிகவும் சிறப்பாக முடித்து வைப்பார். இனம்சனம் பேணி சாதி மத வேறுபாடுகளின்றி அனைவரையும் அன்புடன் வழிநடத்திய எமது அன்னையின் இடத்தினை இனி யாராமல் ஈடு செய்ய முடியும்.

**சேவை விபரம்**

1959 - 1960 மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை / தமிழ் பயிற்றப்பட்ட ஆசிரியர்

1962 கிண்ணியா முஸ்லீம் பாடசாலையில் தனது ஆசிரிய சேவையை ஆரம்பித்தார்.

1962 - 1963 பெரிய நீலாவணை விஸ்ணு வித்தியாலயம்

1963 - 1967 மட்டக்களப்பு ஆனைப்பந்தி ஆண்கள் பாடசாலை

1967 - 1969 மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் பாடசாலை

1969 - 1970 பலாலி ஆசிரியக் கலாசாலை ஆங்கி பயிற்றப்பட்ட ஆசிரியர்

1971 - 1974 கல்முனை மஹ்முத் பாலிகா பெண்கள் பாடசாலை

1975 - 1981 கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை

1982 - 1984 கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி

1984 - 1985 ஆங்கில சிறப்புப் பட்டதாரி (BA.Hons) யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

1986 - 1989 கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி

1989 அதிபர் தரம் ஒன்று

1989 - 1996 உதவி அதிபர், கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி

1996 உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆங்கிலம்

1996 அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமண நிகழ்வின் போது...



'பத்தும் பதியமும்' நூல் வெளியீட்டு விழாவின் போது தனது பிள்ளைகளுடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலாவோடு நானும் நீண்ட பயணம்

அம்மாவைத் தொலைத்து விட்டு
அந்தரத்தில் நானும்
பனியாக நெஞ்சில் - தடம்
பதிந்தவைகளை எண்ணியபடியே...

பிள்ளையாய் இழந்து நின்றேன்
தந்தையின் அன்புதனை
அரை நூற்றாண்டு கண்டபின்
அம்மாவைத் தொலைத்து நின்றேன்...

ஒவ்வொரு தருணத்திலும்
அம்மம்மாவை மட்டுமே
பரிசாய் கேட்கும் என் மக்களுக்கு
என்ன பதில் சொல்லட்டும்...

அன்னையாய் ஆசானாய்
தோழியாய் நீங்களிங்கு
நிரப்பி வைத்த நாட்களெல்லாம்
போதுமென்று எண்ணியோ
புதுப்பாதை தேடினீர்கள்

மார்கழி வரட்டும் அம்மா
வந்து விடுவேன் என்றதற்காகவா
அடித்துப் பிடித்து நீங்கள்
அப்பாவைத் தேடிப் போனீர்கள்

என்ன சொல்லித் தேற்றுவேன்
எனது சொந்தங்களை
யாரால் முடியும்
இந்த வெற்றிடம் நிரப்புவதற்கு

**சோபனா மோகனகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு முறை... எழும்பி வாருங்கள் அம்மா...

எழுப்ப எழுப்ப அம்மா எழும்பவில்லையாம்...
இவ்வளவு தூரத்தில் இதனைக் கேட்டு பதறி நின்றோம் அம்மா நாங்கள்
ஏன் இந்தத் தூக்கம்? எப்படி வந்தது இவ்வளவு விரைவாக.

நால்வரும் சுற்றி நின்று இமைக்காமல் உங்களையே பார்த்திருந்தோம் அம்மா. ஆனாலும் நீங்கள் மட்டும் எழும்பவே இல்லை.

உங்களில் தொங்கியே படிதானே Wesley பாடசாலைக்கு தினமும் நான் செல்வது கூட வர அப்பா இல்லை என்றாலும் மனதளவில் கூட நான் அவரை Miss பண்ணியதில்லை. அந்த இழப்பை ஒரு நாளேனும் உணர்ந்து எங்களை கவலை கொள்ள விட்டதில்லை நீங்கள்.

என் பிள்ளைகளின் நண்பர்கள் உங்களது achivements பற்றிக் கேட்டு விட்டு ஆச்சரியப்பட்டுப் போனார்களாம். கண்பனிக்க நிற்கின்றார். உங்களது பேத்திகள். கண் நிறையுது வரதனுக்கு - மகன் என்றழைக்க இனி யாருமில்லை அவருக்கென்று...

முதன்முதலாக உங்களுக்கான எனது வரிகள் கண்ணீர் கலந்து மெல்ல நகர்கிறது. எங்கே காணுவோம் உங்களை இனிமேல் எப்படித் தாண்டுவோம் இந்தத் தூரத்தை...

**நினைவுகள் மட்டும் தான் அம்மா – உங்களது**
**நினைவுகள் மட்டும்தான் இனி நிரந்தரம்...**



*அன்பு மகள*

**றுக்சனா வரதசுந்தரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவம் நிறை பெற்றோர்



ஆண்டுகள் எழுபத்தாறுக்கு முன்பு
தவத்தினால் ஒரு அறிவுக்களஞ்சியம்
பிறந்த பூமி தனில்
அதன் நிலமே கொளுகொளு வென்றது
வனப்புகள் அதிகரித்தன
கல்முனை கார்மேல் கன்னியர் மடம்
அழகுக்கு அழகு செய்தன
நல் ஆபரணங்கள் பூட்டின
மங்கை நல்லாள்

## கமலாம்பிகைக்கு

ஏற்ற உயரமும் ஆற்றல் குணங்களும்
அழகுற அமைந்த
அழகு மனம் படைத்த
லோகிதராஜா சூட்டினார் மாங்கல்யம்
இப்பொழுது
திட்டம் அவர்களது
மகவுகள் நான்கு
மொத்தமாக வாடா மலராக
உருவெடுக்க
தனம் தானம்
தர்மம்  கோயில்
காலை காலை
எப்பொழுதும் தான்
ஏன்?
எவ்வேளையிலும் தான்
கூப்பிய கரங்கள்
வாய்த்தன மக்கள்
பாண்டிருப்பில்
வரலாறு படைத்த ஊரில்
கோவில் குடி கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரௌபதை
அச்சமும் மேன்மையும் அளித்து
வளர்த்தனள் பொன் குடும்பம்
அன்னையவள் திருநாள்
முக்கிய திருப்பம்
தவநாள்
அர்ச்சுனன் தவ வேடம் பூண்டான்
இறைவன்
தவப் புதல்வியை ஒரு முறை
"வா" என்றான்
அது அந்த 24-09-2015
லோகிதராஜா கணவன்
பேரூந்தில் பிரயாணம்
"வா" என்றான் அவன்
இதோ என்றான்
தவநிலைக்கு வீட்டார் புறப்பட்டனர்
நீ கட்டிலில் கண்ணயர்ந்தாய்
வா என்றான் அவன்
வருகிறேன் என்றனள் நீ
உன் உற்றாரும்
கலங்கினர் கண்கள்
திரௌபதை அம்மன் கண்ணீர் கடல்
கலந்தன
கிராமம் அதிர்ந்தது
கல்வி உலகம் அதிர்ந்தது
அன்னையே நீ தந்த எழுத்துக்கள்
நீ பேசிய இன் குரல்
கருத்து மேடைப் பேச்சுக்கள்
இடம் பெற்று விட்டன
வரலாற்றில்
நானும் என் கதையை முடித்தேன்.
இந் நாடு நலம் பெறவே.

**நண்பன் எஸ்.ஏ.ஐ.மத்தியு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Amma,

It's been 31 days since you are gone, not a single day gone pass without your thoughts. I am not sure how can I recover from this set back. People say life has to go on, but I was never prepared for a life without you. What was the rush? My seven year old asks me why I didn't ask you to stay, and I have no answer for that. The gaping hole in me is slowly sinking in without the weekly chats, blessings and most importantly the beloved word of "Magan". My wife's routine question of "who do you love the most" has ceased forever.

I always looked up to you for inspiration and guidance, guess I need to look even further to the skies to connect with you. There was never a lesson of life from you, because your life is very simple and uncomplicated. The happy days we cherished as we sang Kaverioram and Oh Sara Sara and those sad and scary days where you safeguarded us all were precious for us to remember through the lifetime. Rolling me into the mat to disguise and getting me ready for a round up, punishing me in front of my friends for coming late, wanting to come with me and my friends to the musical show and picking me after school when I was teaching at Colombo Hindu ..........your way of protecting me during those dark days were peerless. I am happy you did that, because I know it really grounded me. The dual role you played in my life is incomparable. I still remember the advice you gave me the first time I left the country "do not lose your integrity where ever you are".

I was able to see firsthand how the community felt your loss, the impact you had on other people's lives was immense. My wife still shell shocked and having difficulties to overcome your loss. Our lives will never be the same without you. Ledshika will not find her Appamma to argue whose her honey pot is? I was fortunate to spend some time with you this year, but the pain of not being with you during your final days will haunt me throughout my lifetime.

Amma although you are gone, the memories of yours will remain within us. One day when I am done with my duties in this world, I would like to hold your hands and walk on the road as your little boy. Until then..........please guide me to lead the family.

Loving MaganPrashanth




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Kirthana**

It's hard to believe that my Ammamma who meant the world to me has now left us all. My Ammamma was the most beautiful, loving, caring and helpful person I have ever seen. She will always be an inspiration and role model to Shya and I. Hearing all the hurdles she faced during her life make me motivated to never give up on life and to continue to strive for success. Ammamma has always shown me the right path in life through her teachings and advice. Ammamma always cares about the well being of others first before herself which is a quality that I admire. She is not only my Ammamma, but she is my well wisher and my best friend. Ammammas unconditional love towards all her grandchildren is what makes us all who we are today. All the memories I have experienced with Ammamma will always be cherished and remembered. I will definitely continue to carry Ammammas' legacy and make her proud at all times. I am so proud to be your granddaughter Ammamma. I am so grateful to god for giving me a chance to spend as much time as I can with you Ammamma. You are our loving and caring Ammamma and our love towards you is a feeling that will last forever and eternity. I was the first grandchild that you came to visit abroad and I am the last grandchild in abroad who you talked to last. I am so thankful to have that chance to hear my Ammammas' voice one last time before you leave us all. I really miss you Ammamma and I just wish that you will always protect and shower us all with your blessings. I love you Ammamma!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்த மகள் சோபனா மோகனகரனுடன்...



மகள் சுபோசனா விவேகானந்தராஜாவுடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Shyanthana**

My Ammama is my role model, my inspiration, my grandma, my best friend, my well wisher, my everything. Whenever she called me, she would always ask me "How is school, what books are you reading, what are your plans for the future." She was always at a constant state of concern, for the well being of all of her kids and grandchildren. Her wise words have been imprinted in my heart, and will never fade. She means the world to me. She motivated me to always try my best. I look up to her. The way she treated everyone with such respect. The way she genuinely cared about everyone's well being. Her heart is so pure. As I get older, I would like to grow and blossom into a woman, just like Ammama. I will always do everything in my power to make Ammama proud. Ammama, you will always be in my mind and forever in my heart. I will think of you every single day, and pray for you. No amount of tears I cry can mask this pain, but Ammama, I can guarantee you that I am one of the luckiest grand daughters on Earth, to have been privileged to get aAmmama, as special as you. I will miss you more and more everyday. I love you Ammama. From your third youngest grand daughter,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Praveena**

My dear Ammamma. The times that we have spent together were some of the best that I can remember. Ever since I was young, I was a massive bookworm. I had trouble making friends because I changed schools a lot and due to my troubles, I sought comfort away from people by visiting the library and borrowing various books. Rather than trying to convince me to drop my habit and be more outgoing, you supported me, suggesting that I read various famous pieces of classical literature while I in turn recommended books that I felt you should try out as well. While the books we each recommended each other clearly showed our generational gap, our interactions gave me immense pleasure as I knew that I could bond with my grandmother using a medium that I had been so intimately connected with throughout my childhood. For the past couple of days, your loss has been immensely devastating to me and our entire family. I am pretty sure you know by now, but you successfully raised 4 children and guided 9 grandchildren. On top of that, you wrote and taught Sri Lankan culture to vast numbers of people. Through your influences, any person you interacted with experienced success on various fronts. Although I really wish I could have seen you one last time, I am mollified by the fact that I still have our memories and conversations intact in my mind and my soul. I am confident that you are in a better place, and for that, I am glad. I hope that someday, we can see the world together in a better place. I love you so much. Rest In Peace Ammamma.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Sandya**

Kamala Logitharajah was not only a warm and loving mother but an amazing and caring grandmother. Whenever she visited our house, the whole house felt warmer and happier. She always worried about others rather than worrying about herself which was the ultimate burden being all alone, yet she truly cared about everyone in our family. She somehow made every situation have a solution and made sure we were all still smiling in the end. Ammama always made me smile with her funny stories of mom and the narrations of all the god's stories, like the one about Krishna stealing butter but only the world could be seen. Last time she came it was in 2009 yet I remember it as it was yesterday, the snow was falling and we were stuck in the house with no power. I was worried that it would be extremely boring especially because I was on break and had nothing to do. But at that moment my grandmother taught us how to play donkey and my mom made kanji water and we ate that with pringles. To this day I play donkey with my cousins and teach my friends how to play the game. That day my grandmother taught me what was important in life. She taught me that spending time with family is far more important in our lives than thinking about your own needs. Ammama all of us here miss you so much and hope wherever you are, you are still smiling so much, where your dimples show. I love you ammama and I know you wil! be in my heart for the rest of my life.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ள அம்மம்மா...

உங்களை அம்மம்மா என்று அழைப்பதா அம்மா (அம்மா) என அழைப்பதா என்று தெரியவில்லை. எங்கள் வாழ்க்கையில் முக்கிய விடயமான ஆரம்ப, பட்டப் படிப்பு இரண்டையும் உங்கள் உங்களது வழிகாட்டலில் தொடங்கினோம். நீங்களே, உங்களது முன்மாதிரியாக இருந்தீர்கள், இருப்பீர்கள். எங்கள் கஷ்டத்தின் போது எப்போதும் பக்கத்தில் இருந்தீர்கள். இன்றும் உங்களை எங்கள் கண்கள் தேடுகின்றன. நாம் கண்ட இரும்பு பெண்மணி நீங்கள் தான் அம்மம்மா.

எங்கள் நெடுந்தூரப் பயணத்தை நொடிப் பொழுதுப் பயணமாக உங்களது பேச்சு, பாடல் மூலம் மாற்றினீர்கள். அன்பையும் பாசத்தையும் மட்டுமே எங்களுக்கு காட்டிய நீங்கள் முதன் முறையாக கண்ணீரையும் தாங்காத சோகத்தையும் விட்டுச் சென்றது ஏன்? பத்தும் பதியமும் போல் உங்கள் புன்னகையும் எங்களுள் நிரந்தரமாக பதிந்திருக்கும். எங்கும் சென்றாலும் அங்கே உங்கள் அன்பிற்குரியவர்கள் இருப்பார்கள்.

WE MISS YOU AMMAMMA

**V. Abenayan, V. Hesara**

---

## காலன் கவர்ந்தனன் களவாடி

பாண்டவர் கதை கூறும் பாண்டிருப்பில்
பண்பான குடும்பத்தில் அவதரித்தாயே
காண்பவர் எல்லோரும் கனம்பண்ணி யதனால்
காலனவன் கவர்ந்தனனோ களவாடி

உங்கள் பண்பாலும் அன்பாலும் உயரம் தொட்டு
எங்களைப் பிரிந்து எவ்வாறு ஏகினீர்
நான்கு வைரங்களை நயமாக உதிர்ந்து
ஒன்பது முத்துக்களை உயர்வடைய வைத்தீரே

பத்தும் பதியமும் முத்தாக ஈர்ந்ததாலே
இத்தரையில் பதிவிரதை திரௌபதையின்
பாதம் சேர நித்திரையில் எமைவிட்டு
நேசம் மறக்காத அம்மம்மா.

**மதுசிக்கா விவேகானந்தராஜா**
**விபுஷா விவேகானந்தராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னவள் என்றும் என் பெரிய அக்கா

கண்ட நாள் முதலாய் - அவள்
என்றும் எனக்குப் பெரிய (அ)க்கா
மூத்தவளாய் முன்னின்று
முதியவளாய் எமக்கிருந்தாய்
தம்பி தங்கை உறவுக்காய்
தடைகளையும் உடைத்தாய்
உன் அருமைச் செல்வங்களை
உத்தமராய்க் கொண்டாய்
சலிக்காது மனம் கொண்டு
சக உறவுகளும் கொண்டாய்
உற்றார் ஊரார் கண்டவர் போற்ற
காணாப் புலமையே கொண்டாய்
அரங்குகள் மேடைகளில்
உரைகள் பல கொண்டாய்
அனைவரும் மதிக்க - வழி
உரைகளும் தந்தாய்
ஊர் பற்றிச் சொல்லவே
புத்தகமும் தந்தாய்
ஊரின் பெருமைதனை
வரலாறாய் உரைத்தாய்
உறவுக்கப்பால் - வளர்
சிநேகமும் கொண்டாய்
ஊரை உறவுக்காய்
ஏங்கவும் வைத்தாய்
இன மதமற்ற
சேவையும் தந்தாய்
இல்லறமும் கொண்டு
இன்புறவே கொண்டாய்

சகலதும் கொண்டு
சம்மதம் கொண்டாயோ?
காலனை நேசித்து - உறவின்
கடமைகளை மறந்தாயோ?
போதும் போதும் என்றே
புலம்பவைத்துச்
சென்றுவிட்டாய்
கனத்த மனம் எனக்கு - நாளும்
இறுக்கி வைத்து அழுகின்றேன்.
நானறியாப் பருவத்தில்
தங்க மாலை நலச் சாறம் தந்தாய்
தேடியபோது அறிவால் - நல்
விளைவுகளும் தந்தாய்
என்றென்றும் மறவா
இரங்கும் குணமுனக்கு
கோபங்கள் கொண்டாலும் -அவள்
என்னவள் என்றும்
என் பெரிய அக்கா.

*சகோதரன்*
**Dr. S. செந்தில்நாதன்**
(LECTURE,
NILAI UNIVERSITY,
MALASIA)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kamala Akka married my cousin brother late Lohitharajah. Both of them were closley attached to my mother and me. they were interested in the progress of my academic and professional carrier. They were always there to help me and my mother. My wife indra has a special attachment to kamala Akka. She treasurer, her advice and guidance.

Lohitha Annan met with a tragic accident and left her alone with four young children. She faced the tragedy with courage. She did not complain of fear or worries to others. She looked after her children Shobana, Subo, Rukshi and Prashanth with love and affection, provided them with good education and set them to lead a good life. During this period she pursued higher studies and set them to lead a good life. During this period she pusdued higher studies and obtained a degree, rose to the position of Assistant Director of Education, published a book, wrote several literary articles and demonstrated to her children and others that with dedication, motivation and determination you can achieve what you aspire in life.

She loved her grandchildren, looked after them followed their progress and motivated them to do well in their academic carrier. I am sure that she was a role model to all her grandchildren and they will try to emulate her.

After the 83 riots, I was looking for jobs abroad. I was not sure where I will get a job and whether I could take my mother with me. Kamala akka told me, not to worry she will look after my mother. I will never forget these words. Her affection and readiness to help others was always there.

Life dealt her a cruel blow and her time to go came far too soon, both for her and those who loved her. She leaves behind the wonderful legacy of a close - knit, caring family, and we owe it to her to carry on supporting and looking after one another, showing the same love that she did, so that our memories of her will not fade, but rather grow fonder as time goes by.

**M. Sathiamoorthy** - Australia.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mrs.Kamala Lohitharajah – My Acca

It is to me a shock to realise that acca is no more – she was very alive, when I spoke to her only a few days ago with a request to write a personal account about her relationship with our family, appa in particular, for a memorial volume for him. She sent it to me within a week with a request that I should not include it, if it was not in any way suitable - that was acca. Now I am seated here writing a note about her for her anthiratti malar ....

I will not hear any more her dear voice calling me "kunju" with so much affection. She was my athan's wife who came into our family some 40 years ago. My relationship with her was very close even after I left Sri Lanka. I had the good fortune to visit Kalmunai once or twice every year and I saw her and enjoyed her hospitality frequently.

Acca had a hard life after loosing her husband in 1977. She was young with 4 children to look after. Aththan died soon after acca and he returned to Batticaloa from my father's funeral in Colombo. But Acca turned her life around so successfully that it is an example for the family, particularly for the grand children to reflect on. Acca did a Degree, and rose to the level of Assistant director of Education, a very high level for a teacher to achieve during her career. Her interests were manifold. More than anything else she was a happy, warm, lovable human being, full of life and willing to try anything.

When she was preparing for her Degree she spent some time in Peradeniya with us. My husband and I spent a lot of time together with her and we still cherish those memories.

Acca, I can go on saying so many things. What a beautiful person you were till the very end! Happy, contented, not envious of others and ever willing to help. God was also kind to you. He blessed you with lovely children, grand children, in-laws, family and friends. They all came to join you in your happiness when you published your book.

Acca you are a blessed human being. I miss you, as numerous others also will.

**Mrs.Nalini Kasinathar** (Australia)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மகளின் கிழக்குத் தாய்

1978ல் எனது வயது 28. என் மனைவி வசந்தியின் வயது 18, திருமணமாகிய எனது மனைவி தன் வீடு எனும் சிறிய கூட்டைத் தவிர எதுவும் அறியாதவள்.

என் பெற்றோரும் மனைவியின் பெற்றோரும் புளிச்சாதமும் கொண்டு குருநாகல் ரயில்ப் பாதை ஊடாக மட்டக்களப்பை அடைந்து நண்பன் (Boc) பஞ்சாச்சரத்தின் உதவியுடன் தாளங் குடாவில் தங்கி கல்முனை அடைந்தோம். அங்கு ஒரு வீடு, நான் நினைக்கிறேன் மிகப் பழமை வாய்ந்த வீடு. தற்போது 150 வருடங்கள் கடந்த, கொழுக்கி ஓட்டினால் பாண்டிருப்பில் தீப்பள்ளையத்திற்கு முன்பாக பழைய ஞரடி°ழுளவழககைஉந இற்கு அருகாமையிலுள்ள தளப்பத்து மரம் இருந்த அந்த வீட்டில் எம் இனிய இளைமையான வாழ்வு அந்த முதிய பழமையான வீட்டின ஆசிர்வாதத்துடன் தொடங்கியது.

எம்மைத் தொடர்ந்து 1978 சூறாவளி. அது ஒரு பெரிய கதை புறம்பாக எழுத வேண்டும். அந்த நாள் கமலா அக்காவுடன் அதாவது முன்வீட்டிலிருந்த கமலா அக்கா குடும்பத்துடன் சிறிது அறிமுகமாயிருந்த உறவு மிகவும் வலுப்பெற்றது.

எம் இருவரது பெற்றோருமற்ற வாழ்வை நெறிப்படுத்தியது. அறநெறி கொண்ட கமலா அக்காவே. அதாவது வள்ளுவர் காட்டிய வழியில். இடைவெளிகள் பல 1978லிருந்து இருந்த போதும் எமது தொடர்புகள் என்றும் அறுந்ததில்லை. என் அக்கா எழுதிய பத்தும் பதியமும் எனும் நூல் அவரது மண்பற்றின் ஒரு பாகத்தை மட்டுமே காட்டி நிற்கின்றது. வல்வெட்டித்துறை மண்ணை சேர்ந்த என்னை எனது மண் பற்றி எழுதத் தூண்டியவரும் எனது அக்காவே. இதனால் நான் எம் மண் பற்றிய கதைகளையும் நமது பாரம்பரிய கடல் வணிபம் பற்றியும் அமெரிக்கா சென்ற அன்னபூரணி பற்றியும் நூல்களை எழுத தூண்டிய பெருமை அப்புனிதவதிக்கே சேரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது பிள்ளைகள் அவரது பிள்ளைகளே. சுருங்கக் கூறின் அவரது குடும்பம் எமது குடும்பமே. வழமையாக கமலா அக்காவுடன் தொலைபேசியில் இரவு நேரத்தில் கதைக்கும் என் மனைவி. அன்று ஒரு நாள் அதிகாலை 4.30க்கு தொடர்பு கொண்ட போது அம்முனையிலிருந்து வந்த அவரது மருமகனின் குரல் தந்த விடயம் என் மனைவியை அதிர வைத்தது. அதாவது "அவரது மரணச் சடங்கு இன்று" என்பது தான் அது.

இதைக்கேட்ட என் மனைவி அந்த நேரத்தில் என் முதுகில் உதைத்து குளறினாளே தவிர விடயத்தை சொல்ல குரல் வரவில்லை. ஒருவாறாக விடயமறிந்ததும் என் மகன் உடனடியாகவே எனது அம்மம்மாவை பார்க்க போங்கள் என எம்மை தனி வாகனத்தில் அனுப்பி வைத்தார்.

எமக்காக காத்திருந்த அந்த பூதவுடலை தரிசித்ததும் எமது பூர்வாங்க நிகழ்வுகளையெல்லாம் நினைத்து அதிசயமும் ஆச்சிரியமும் அடைந்தோம்.

பேரப்பிள்ளைகளால் பராமரிக்கப்பட வேண்டிய வயதிலுள்ள பேத்தியார் தனது தள்ளாத வயதிலும் தன் பேரனுக்காக கொழும்பில் வாடகை வீட்டில் வசித்து வந்தமை (ஒருவாரத்திற்கு முன்பு கூட) அந்த அக்காவின் அறநெறி வாழ்வை சுட்டிக் காட்டும் ஒரு புள்ளியாக அமைகின்றது. அன்னாரின் நன்நெறிவாழ்வு அவரது மரணச்சடங்கில் சாதிமத பேதமின்றியும் பரம்பரை பல கடந்த அனுதாபிகளின் பங்கு பற்றல் ஊடாக என்னால் உணரப்படுகின்றது.

இவ்வண்ணம் என் அக்காவின் சிறப்புக்களில் ஒரு துளியை மட்டும் இங்கு தந்து நிற்கும். வல்வெட்டித்துறை - ந. சிவரட்ணம் (முன்னாள் இலங்கை வங்கி கல்முனை, உப முகாமையாளரும்

தற்போது ஓய்வு நிலையிலுள்ள இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளரும்)

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய என் அக்காவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்வோமாக"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதைப்பும் விளைவும்

- வ. சுப்பிரமணியம் -

விடயங்களைப் பகிர்ந்து கொள்ள, புரிந்து கொள்ள அன்போடு உதவிய ஆத்மா இன்றில்லை என்ற நினைவு வேதனையைத் தருகின்றது. விடயதானத்திற்கேற்ப விளக்கம் விபரிப்புக் கொடுக்கும் பல்துறை ஆற்றலுள்ள ஆளுமையின் பிரிவு வெற்றிடமாகவே உள்ளது. இயற்கை எய்திய திருமதி. கமலாம்பிகை லோகிதராஜா அவர்களைப் பற்றிய எனது நினைவுகளை பதிவு செய்ய விளைகின்றேன்.

கல்வி, கலை, இந்து சமயம், சமூகம் ஆகியவற்றில் சேவையாற்றிய குடும்பப் பாரம்பரியத்தில் தோன்றிய இவரும் அவ்வழியே தனது வாழ்வியலில் பணிபுரிந்து வாழ்வாங்கு வாழ்ந்தவராவார். தமிழ் ஆசிரியர் பயிற்சியும் ஆங்கில ஆசிரியர் விசேட பயிற்சியும் பெற்று ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் யாழ்-பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம், மொழியியல் (Linguistic) பாடங்கள் கொண்ட துறையில் விசேட பட்டத்தையும் பெற்றார். இவ்விரு மொழிகளின் அறிவும் திறன்களும் இவரது ஆளுமைக்கு உரமூட்டின மொழிப்பிரயோகத்தில் சொற்களில் ஏற்படும் முட்டுக்களை மிக எளிதாக முட்டறுக்கும் ஆற்றல் இவரிடம் காணப்பட்டது.

தான் சேவை புரிந்த கல்வி நிலையங்களிலும் கல்விப் பணிமனைகளிலும் சமூகத்திலும் இவரது சேவை சிறந்த வினைத்திறனுடனிருந்ததால் சிறந்த விளைதிறன் பெறுபேறாயிற்று. விளையாட்டு, சாரணியம், மற்றும் கவி, கூத்து, கும்மி, கோலாட்டம் போன்ற கிராமியக் கலைகளிலும் ஈடுபாடு கொண்டவர். விவாதம், பேச்சு, வில்லுப்பாட்டு, நாடகம் போன்ற விடயங்களிலும் தேர்ச்சி மிக்க இவர், மாணவரைப் பயிற்றுவித்து மாணவர்களை இக்கலைகளின் பால் நாட்டங் கொள்ள வைத்ததோடு, கலை இலக்கியப் போட்டிகளிலே மாணவர்கள் வெற்றி பெறவும் வைத்தார்.

ஆசிரியையாக ஆரம்பத்தில் பதவியேற்ற இவர், பின்னர் ஆசிரிய வளவாளராக, தொலைக்கல்வி போதனாசிரியராக, ஆங்கில ஆசிரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசகராக அதிபராக (தரம்-1) ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக எனப் பல்வேறு பதவி நிலைகளில் பணிபுரிந்தார். மாணவர்களதும், ஆசிரியர்களினதும், பெற்றோரதும், மேலதிகாரிகளினதும், அன்பையும் மதிப்பையும் மெச்சுதல்களையும் பெற்றவராவார்.

வாசிப்பை நேசிக்கும் இவர், ஆக்க இலக்கிய நூல்களை (கவிதை, சிறுகதை, நாவல்) ஆய்ந்து விமர்சிக்கும் திறன் கொண்ட இவர் அவ்வப்போது ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்திய போட்டிகளில் இரு தடவைகள் ஆய்வுக் கட்டுரைக்கான பரிசுகளையும் பாராட்டையும் பெற்றார். 1993-07-04 அன்று கல்முனைப் பிரதேச சாகித்திய விழாவில் "கல்முனைப் பிரதேச அவைக்காற்றுக் கலைகள்" என்ற மகுடத்தில் அவரால் எழுதி வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை இன்றும் இப்பிரதேச அவைக்காற்றுக் கலைகளை ஆராய்வோருக்கு உதவுகின்றது. கொழும்பு இந்துக் கல்லூரி பிரதி அதிபர் திரு.இராஜரெட்ணம் அவர்களின் இளைப்பாறுகையை ஒட்டி வெளியிடப்பட்ட "நல்லாசிரியனுக்கான விதப்புரை" என்ற நூலில் "மட்டக்களப்புப் பிரதேச மொழிவழக்கு" எனும் இவரது ஆய்வுக்கட்டுரையை அந்நூற்பதிப்பாசிரியர் குழுவின் பாராட்டைப் பெற்றது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற "ஐந்திணைகளுக்குள் சங்ககாலப் புலவர் அக்காலத் தமிழர் தம் வாழ்வையும் வாழ்விடங்களையும் செப்பினர். திருமதி. கமலாம்பிகை லோகிதராஜா அவர்கள் "ஆறாந்திணை" என்று தலைப்பிட்டு புலம் பெயர்ந்த நம்மவர்களின் வாழ்வியலை விளக்கும் கட்டுரைகளையும் எழுதியிருந்தார். இவரது கிராம நிலைப்பட்ட ஆய்வுநூல் "பத்தும் பதியமும்" கிழக்கு மாகாணமட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பரிசுகளையும் பாராட்டுதல்களையும் பெற்றது ஒரு விசேட அம்சமாகும்.

இவருக்கு பிள்ளைகள் நால்வர், மூவர் பெண்கள் ஒருவர் ஆண், நால்வரும் உயர்கல்வித் தகைமையும் உயர் தொழிற்கல்வித் தகைமையும் கொண்டவர்கள். ஆதலால் நல்ல பதவிகளைப் பெற்று சிறப்பாக வாழ்கின்றனர். யாழ் பல்கலைக்கழகத்திலே இவர் தனது பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்த காலப்பகுதியிலே இவரது மூத்த மகள் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே பொறியியற் துறையில் கற்றுக் கொண்டிருந்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானும் உயர்கல்வி கற்று பிள்ளைகளையும் உயர்கல்வி கற்க வழிப்படுத்தியதோடு அவர்களுக்குப் பொருத்தமான உயர் தொழிற்தகைமை மிக்க வாழ்க்கைத் துணைவர்களாக திருமணஞ் செய்து வைத்தார். அவர்கள் எல்லோரும் தமது பிள்ளைகளோடு சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர்.

இறைபக்தி மிக்க இவர் தனது இஸ்ர தெய்வமாக சிவபெருமானையே வழிபட்டு வந்தார். ஆலய வழிபாடுகளிலும், விரத அனுட்டானங்களிலும், சிரமமாக ஈடுபட்டுமிவர். திரவாசகம் முற்றோதல், "கந்தபுராணம்" "பிள்ளையார் கதை" பாடிப்பயன் கூறுவதிலும் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றுவதிலும் ஆற்றல் மிக்கவராவார்.

சிறந்த தாயாக, தந்தையாக, சேவகியாக வாழ்ந்து இயற்கை எய்திய அன்னாரது முப்பத்தோராவது நினைவு நாளிலே நினைவுகூர எனக்குக் கிடைத்த இச்சந்தர்ப்பத்தை பெரிதும் மதிக்கின்றேன். நீத்தாரை நினைவு கூறல் என்பது சிறந்த மனித விழுமியப் பண்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகள் றுக்சனா வரதசுந்தரத்துடன்...



மகன் பிரசாந் லோகிதராஜாவுடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு காட்டிய ஆசான்

அனைத்துத் திறமைகளையும் தன்னகத்தே கொண்ட ஒரு பெண்மணியாகவும், குடும்பத்தை சிறப்பான முறையில் கட்டியெழுப்பிய குடும்பத்தாயாகவும், கருணையுடனும், கண்டிப்புடனும் கல்வியை வழங்கிய ஆசானாகவும், அன்பு, அரவணைப்பு என்பனவற்றை தனது செயற்பாடுகளாலும், பாசத்தாலும் கட்டியெழுப்பிய பாட்டியாகவும் திருமதி.கமலாம்பிகை லோகிதராஜா அவர்களை என்னால் காணமுடிந்தது.

மெதடிஸ்த மிஷனரிகளால் ஆரம்பிக்கப்பட்ட லீஸ் உயர்தர ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையில் ஆண் மாணவர்கள் மத்தியில் தனியொரு மாணவியாக கல்வி கற்றதை தற்போது எண்ணுகின்ற போது அவரது தைரியம், ஆளுமை, சிறுவயதிலே ஆரம்பித்து விட்டது எனலாம்.

கல்முனை உவெஸ்லியில் யோகம் வேலுப்பிள்ளை என்கிற ஆளுமை மிக்க அதிபரின் தலைமைத்துவத்தின் கீழ் மரங்களாகவும், செடிகளாகவும், புற்களாகவும் தெரிந்த ஆசிரியர்களும், மாணவர்களும் காலப் போக்கில் விருட்சங்களாக மாறியமை இப் பாடசாலையின் வரலாறாகும். அந்த வகையில் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள், பெண் சாரணியம், உடற்கல்வி செயற்பாடுகள், மாணவர்களின் திறமைகளை வெளிக்காட்டும் மாணவ மன்றங்கள், நாடகம் போன்றவற்றில் அவரின் செயற்பாடுகளினால் இனங்காணப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு முன்னணிக்கு கொண்டுவரப்பட்டவர்கள் இன்றும் தமது ஆசானை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து தமது முகநூலில் பதிவுகளை இட்டு பாராட்டுவதன் மூலம் ஆசிரியை எந்தளவுக்கு அவர்களை கவர்ந்துள்ளார் என அறியமுடிகின்றது.

கணவனை இழந்த பின் வீட்டுக்குள் முடங்கிவிடுகின்ற சமுதாயத்தில் குடும்ப பாரத்தோடு தனது கல்வித் தகைமைகளையும், தொழில் வாண்மையையும் உயர்த்திக் கொண்டதோடு அதிபர் பதவி, தொலைக் கல்வி போதனாசிரியர் பதவி, ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளை அலங்கரித்து ஓய்வு பெற்றாலும் ஓய்ந்து விடாமல் இலக்கிய பணிகளில் ஈடுபட்டதோடு மட்டுமல்லாமல் கல்முனை கலை இலக்கிய வட்ட தலைவரானமை பெருமைக்குரிய விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009ல் நான் அதிபராக பொறுப்பேற்ற முதல் நாளில் பாடசாலைக்கு தொலைபேசி அழைப்பெடுத்து வாழ்த்தியதை மறக்க முடியாது. பாடசாலை நிகழ்வுகளுக்கு அவரை அழைக்கும் போது ஊரில் நின்றால் கலந்து கொள்வது அவரது வழமையாகும். இவ்வாறாக ஒரு தடவை ஆசிரியர் தினத்திற்காக அழைப்பு கொடுக்கப்பட்டபோது அவர் கொழும்பில் தங்கியிருந்தார். ஆனால் நிகழ்வு நடைபெற்றபோது வீடு திரும்பியிருந்தார். ஆனால் அழைப்பிதழ் தாமதித்து வீட்டாரால் கொடுக்கப்பட்டபோது அவ்விடயத்தை அடுத்த நாள் பாடசாலைக்கு வந்து எடுத்துரைத்து வராமைக்காக மன்னிப்புக்கேட்ட பெரும் தன்மையை மறக்கமுடியாது.

15.10.2010 இல் நடைபெற்ற வாணிவிழாவில் “கலாஜோதி” எனும் பட்டத்தை பாடசாலை சமூகம் அவருக்கு வழங்கி கௌரவித்ததும், அத்துடன் பாடசாலையின் பழையமாணவர் சங்கத்தால் சாதனை படைத்த பழையமாணவர்களை கௌரவித்தல் எனும் அடிப்படையில் திருமதி.கமலாம்பிகை லோகிதராஜா அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்து பாராட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அவருடைய நூல் வெளியீடு நடைபெற்றபோது நான் கலந்து கொள்ள முடியாத நிலை இருந்ததனால் என்னைத் தேடிவந்து நூலைத் தந்தமை அவரின் அன்பான உள்ளத்தையும் தாழ்மையையும் எடுத்துக்காட்டுகின்றது. இறுதிவரை விருந்தினர்களை வரவேற்று உபசரிக்க தவறாதவராக இருந்தார் என்பது மனதை நெகிழவைக்கின்ற சம்பவமாகும். அவருடைய சிறப்பான பணியை கண்டவர்கள் அனுபவித்தவர்கள் பலர் உண்டு. அவருடைய அன்பை ருசித்தவர்கள் பலர் உண்டு. மற்றவர் பிள்ளைகளை தன் பிள்ளை போல் நேசித்த ஓர் உள்ளம் எங்கள் மத்தியில் இல்லாவிடினும் இத்தனை நாள் அவரை வாழவிட்டமைக்காகவும் அவருடைய சிறப்பான பணிக்காகவும் இறைவனுக்கு நன்றி செலுத்துவதைத் தவிர வேறு எதனை நாம் செய்துவிட முடியும். இறை அன்பே நம் ஒவ்வொருவருக்கும் ஆறுதலைத் தரமுடியும்.

**வடிவேல் பிரபாகரன்**
அதிபர
உவெஸ்லி உயர்தர பாடசாலை, கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிப்பேச்சு

- உமா வரதராஜன் -

கமலாம்பிகை டீச்சர் இறக்கும் போது அவருக்கு வயது 76. கமலாம்பிகை டீச்சரை நேரில் அறியாமல் பழகாமல் போனவர்களுக்கும் வயதுடன் மரணத்தை இணைத்துப் பார்ப்பவர்களுக்கும் இந்தத் தகவல் பேரதிர்ச்சி அளிக்கக் கூடிய ஒன்றல்ல. என்னைப் போலவே அவரை நேரில் அறிந்த பலருக்கும் அவருடைய மரணச் செய்தி பெருந்துக்கத்தையும் எதிர்பாராத அதிர்ச்சியையும் அளித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. கவிஞர். சண்முகம் சிவலிங்கம் போல தூக்கத்திலேயே பிரிந்து விட்டார்.

அவர் மரணமடைவதற்கு நான்கு தினங்களுக்கு முன்னர் (20-09-2015) இடம் பெற்ற அமரர்.சண்முகம் சிவலிங்கம் அவர்களின் காண்டாவனம் நூல் வெளியீடு நிகழ்வுக்கு வந்திருந்தார். நான் அவரை முதன் முதலாக சந்தித்துப் பழகிய போது கண்ட அதே முகம் அதே சிரிப்பு அதே நிமிர்ந்த நடை. நேர் கொண்ட அதே பார்வை சபையின் இடது புற முன்வரிசை நாற்காலிகளில் ஒன்றில் அமர்ந்து உரைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். சந்தனத் தேவன் போல் மங்களகரமான தோற்றத்தில் யோகராஜா ஐயர் அவர் பக்கத்தில் அமர்ந்திருந்தார். டீச்சரின் காதினுள் நடு நடுவே ஐயர் குசு குசுத்துக் கொண்டிருந்தார். நம்மில் பலருக்கும் ஐயர்கள் ஒப்புவிக்கும் சமஸ்கிருத ஸ்லோகங்கள் புரியாமல் இருப்பதைப் போலவே மேடையில் நிகழ்த்தப்பட்ட சில உரைகள் ஐயருக்கும் புரியாமல் போயிருக்கலாம். 'பிரதி... பிரதி...' என்றொரு சொல் இப்போதெல்லாம் அநேகமான இலக்கிய மேடைகளில் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. 'பிரதி என்றால் போட்டோ கொப்பியா என ஐயர் டீச்சரிடம் கேட்டிருக்கவும் கூடும்.

அன்றைய நிகழ்வின் முடிவில் 'பந்தல் கலைக்கும் கல்யாண வீட்டை' நினைவுபடுத்திக் கொண்டிருந்த ஒரு சூழலுக்கு மத்தியில் நானும் டீச்சரும் சில வார்த்தைகள் பேசிக் கொண்டோம். 'என் வீட்டக்கு வந்து விரிவாகப் பேச வேண்டும் எனத்தான் அடிக்கடி எண்ணினாலுங் கூடப் பல்வேறு வேலைகளாலும் அது கை கூடுவதில்லை என அவர் கூறினார். 'ஆம் நாம் எல்லோருமே நேரத்துடன் கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கிறோம்' என்று கூறினேன். அதன் பின் உடல்நலம் பற்றி பரஸ்பரம் விசாரித்துக் கொண்டு விடை பெற்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் என் வீட்டுக்கு இனி எப்போதுமே வரப் போவதில்லை என்பதோ அதுதான் எங்கள் இருவருக்குமான இறுதி உரையாடலும், சந்திப்பும் என்பதோ அப்போது எனக்குத் தெரியாது வாழ்க்கையின் பல நிகழ்வுகளைப் போன்றே சாவின் கணமும் புரியாத ஒரு புதிர். பாலுமகேந்திராவின் 'அழியாத கோலங்கள்' படத்தில் ஆரம்பக் காட்சியில் நாயகன் கௌரிசங்கர் தன் பால்ய கால நண்பன் பட்டாபியிடமிருந்து வந்த கடிதமொன்றை வாசிப்பான். 'நம்ம இந்து டீச்சரில்ல இந்து டீச்சர் நம்ம இந்து டீச்சர். அவங்க முந்தநாள் காலமாயிட்டாங்கடா...'

கமலாம்பிகை டீச்சரின் மறைவையொட்டியும் இதே துயரத்துடன் ஆதங்கத்துடனும் நீங்காத நினைவுகளுடனும் இந்த உலகெங்கும் பரந்து வாழும் அவருடைய மாணவர்கள் 'பட்டாபி கோபி' கள் போல் ஒருவருக்கொருவர் தங்கள் துயரங்களைப் பகிர்ந்து கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அவர் டீச்சர் நிலையிலிருந்து கல்விப் பணிப்பாளராக உயர்ந்த ஒருவர். ஆனாலும் அந்தப் பதவியுடன் அவரைப் பொருத்தி வைத்து பார்க்க இயலாத படி 'டீச்சர்' என்ற நிரந்தரமான சித்திரமே எங்கள் எல்லோருடைய மனங்களிலும் பதிந்து போயிருந்தது எப்போதுமே அவரை 'டீச்சர்' என்ற மனதுக்கு நெருக்கமான வார்த்தையைக் கொண்டு அழைப்பதுதான் என்னுடைய வழக்கம்.

என்பதின் பருவ காலத்தில் கமலாம்பிகை டீச்சர் எனக்கு அறிமுகமானார். என்னுடைய வீடு ஊரின் வடக்குப் புறமாக எல்லையோரத்தில் இருந்தது. ஆனால் என்னுடைய அநேகமான நண்பர்கள் ஊரின் மத்திய பகுதியைச் சேர்ந்தவர்கள். மாலையானதும் நாங்கள் எல்லாரும் டீச்சரின் வீட்டுக்கு எதிர்புறத்தில் 'வாள் மாத்தும் சந்தியில்' இருந்த சின்னையா மாஸ்டரின் வீட்டு மதிலில் ஏறி வரிசையாக உட்கார்ந்து கொண்டிருப்போம். மகேசன், புஸ்பம், சபேசன், தயா, புவனன், சத்தியன், பிரேமன் இப்படி ஒரு டேர்ட்டி டஸின் டீம் (Dirty Dozen) அது. மரவள்ளிக் கிழங்குப் பொரியல் கூச்சல், கும்மாளம், கிண்டல், விசில், தெருவில் வருவோர் போவோரை வம்புக்கிழுத்தல் என எங்கள் யவ்வனம் கழிந்த காலம் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது சில வேளைகளில் வெளியே வந்து டீச்சர் கடுகடுப்பான முகத்துடன் எட்டிப் பார்த்திருக்கிறார். தி.ஜானகிராமனின் நாவல்களில் வரும் ஆஜானுபாகுவான, ஆகிருதி கொண்ட உருண்ட திரண்ட நாயகிகளை ஞாபகப்படுத்தும் தோற்றம் வலைப் பந்தாட்டம் ஆடப் போனால் துள்ளாமல் குதிக்காமல் நின்ற நிலையிலேயே பந்தைத் தூக்கி வளையத்துக்குள் போட்டு விடக் கூடிய உயரம் அவருக்கு மதில்மேல் ஏறிக் குந்திக் கூச்சலிட்டுக் கொண்டிருக்கும் எங்களைப் பார்த்த மாத்திரத்தில் அந்த முகத்தில் சற்று முன் தோன்றிய கடுகடுப்பு மாயமாக மறைந்து போய் விடும். கடுகடுப்பை ஒரு கணத்துக்குள் புன்னகையாக மாற்றிக் கொண்டு 'என்ன கிளி' என்று கேட்டு விட்டு அவர் மறுபடியும் உள்ளே சென்று விடுவார். 'என்ன குரங்குகளே" என்றுதான் அவர் அன்று உண்மையில் எங்களை அழைத்திருக்க வேண்டும். ஒரு நாகரீகம் கருதி எங்களை அப்போது அவர் கிளிகளாக ஆக்கியதில் நாங்கள் அடைந்த புளகாங்கிதத்துக்கு அளவே இல்லை. அந்தப் பூரிப்பில் அன்று அவருடைய வீட்டிலேயே தண்ணீரும் கேட்டு வாங்கிக் குடித்தோம். மெல்ல மெல்ல சின்னையா மாஸ்டரின் மதிலலைக் கைவிட்டு விட்டு டீச்சரின் வீட்டு போர்டிக்கோவின் எதிரும் புதிருமான அரைச்சுவர்களில் டீ.வி.பட்டிமன்றப் பேச்சாளர்கள் போல் ஏறி உட்கார்ந்து கொண்டோம்.

பெண் என்ற வகையில் அவர் கடந்து வந்த படிக்கட்டுகள் மெத்தையின் மென் சுகம் தந்தவையாக இருந்திருக்க மாட்டா. அவரும் என் அம்மாவைப் போலவே தன் இள வயதில் கணவனை இழந்த ஒருவர். ஆனால் அவர் தளர்ந்து போய் நான்கு சுவர்களுக்குள் தன்னை ஒடுக்கிக் கொள்ளவில்லை. துயரத்தின் ஆறும் கடக்கக் கூடியதே என்ற தன்னம்பிக்கை அவரையும் குழந்தைகளையும் கரை சேர வைத்தது.

அவரைப் போன்றவர்களின் ஆரம்ப கால வாழ்க்கை நிலையை நான் நினைத்துப் பார்ப்பதுண்டு. எங்கள் ஊரில் ஒரு பெண் சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் எப்படி இருந்திருப்பாள்? கண்ணுக்குத் தெரியாத கயிறால் தன் வீட்டுடன் கட்டிப் போடப்பட்டவளாக, கண்களை மூடிக் கொண்டு தாலிக்குக் கழுத்தை நீட்டுபவளாக சமையல்காரியாக, பிள்ளைகள் பெறும் யந்திரமாக பிறரால் கட்டுப்படுத்தப்படும் ஒருத்தியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு வாசலில் நின்று தெருப்புதினங்கள் பார்க்கக் கூட அனுமதிக்கப்படாதவளாக ஓர் இறுக்கமான சூழ்நிலைக்குள் "அன்றைய பெண்" வாழ்ந்திருப்பாள். சுயதேர்வு, விருப்பு, பெண்களையும் சக ஜீவன்களாகப் பார்க்கும் ஒரு தாராள மனப்பான்மை, வசதிகள், சுதந்திரங்கள் என்பவற்றுக்கெல்லாம் அப்போது அங்கே இடம் இருந்திருக்காது.

ஆனால் விதி விலக்காக கமலாம்பிகை டீச்சர் போன்ற வெகு சில பெண்கள் தாங்கள் ஏந்திய அகல் விளக்கு அணைந்து விடாதபடி இந்த ஊரின் காட்டாறு வழியே பயணித்து தங்கள் இலக்கை அடைந்திருக்கிறார்கள். கல்வியால் கிடைத்த பெறுபேறு இது.

டீச்சரின் மேலதிக விசேஷம் கல்வித்துறையுடன் மாத்திரம் அவர் நின்று கொள்ளாமல் கலை, இலக்கியம், சமூக செயற்பாடு, தியானம் என்று தன் பயணத்துக்கான திசைகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டமை.

1979 என்று நினைக்கிறேன். 'புது மோடிகள்' என்றொரு நாடகக் குழுவை நாங்கள் உருவாக்கியிருந்தோம். நண்பர் சபா சபேஷனின் 'சகானம்' நாடகத்துக்கு நாயகி வேடம் தரிக்க ஒரு நடிகை தேவை. வழக்கமாக அப்போது நாங்கள் போடும் நாடகங்களில் எல்லாம் மலரவன்தான் பெண் வேஷம் போடுபவன். ஆனால் அளவுக்கதிகமான சிகரெட் பாவனை அவனுடைய உதடுகளை குசினியின் புகை போக்கி போல் ஆக்கி இருந்தது. இதை மறைத்து அவனைப் பெண்ணாக்க சிவப்பு நிற லிப்ஸ்டிக் நிறையத் தேவைப்பட்டது. தவிரவும் சபேஷனின் நாடகம் சோக மயமானது. நாயகி இறுதியில் தற்கொலை செய்து கொள்ளுவாள். மலரவன் பெண் வேஷம் போட்டு தற்கொலை செய்யும் காட்சியில் நடித்தால் அந்த நாடகத்தின் தலைவிதியே தலை கீழாக மாறி விடும். ரசிகர்கள் வயிறு குலுங்கச் சிரித்து கரகோஷமிட்டு 'வன்ஸ் மோர்' கேட்கவும் கூடும் அவன் மீது அவ்வளவு கொலைவெறியுடன் ஊர் சனங்கள் இருந்தனர்.

கமலாம்பிகை டீச்சர்தான் இப்படி ஒரு இக்கட்டான நிலையில் அன்று எங்களுக்குக் கை கொடுத்த தெய்வம்' ஆனார். அவருடைய மகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷோபனாவை நாயகியாக்க அவர் சம்மதித்து விட்டார். நாடகம் மிகவும் வெற்றிகரமாக நடந்தேறியது. எழுபதுகளில் மட்டுமல்ல இன்றுங் கூட எங்கள் சூழலில் இது அவ்வளவு எளிதாக நடக்கக் கூடிய காரியமல்ல. கலை மீதான நேசிப்பும் ஓரளவு முற்போக்கான சிந்தனையும்தான் டீச்சரின் 'தற்துணிவுக்குக் காரணங்கள்.

பல சமயங்களில் அவருடைய 'தேடல் மனநிலை' என்னை வியப்பில் ஆழ்த்தி இருக்கிறது. சாஹித்திய விழா மலரொன்றில் அவர் எழுதிய 'கல்முனைப் பிரதேசத்தின் நாடக முயற்சிகள்' கட்டுரை மிகச் சிறந்ததோர் ஆவணம். அவர் சில வருடங்களுக்கு முன்னர் பாண்டிருப்பு என்ற எங்கள் கிராமத்தைப் பற்றி 'பத்தும் பதியமும்' என்றொரு நூல் எழுதினார். பதி என்றால் இடம் என்றொரு அர்த்தம் இருக்கின்றது. தான் வாழும் இடத்தைப் பற்றிப் பத்தும் பலவுமாய் உள்ள விபரங்களை இந்த நூல் உள்ளடக்கி இருந்தது.

இந்த நூலுக்காக டீச்சர் மேற்கொண்ட தேடுதல்களும் அவற்றின் நிமித்தம் அவர் காட்டிய கடுமையான உழைப்பும் சாதாரணமானவை அல்ல. ஊர்ப் பெயரின் காரணம் சுற்றுச் சூழல் குடிப்பரம்பல் சாதி முறைகள், உணவு உடை, ஒப்பனை, அணிகலன்கள், தொழிலின் தன்மைகள், கல்வி, கலாசார கலை, இலக்கியப் பிண்ணனிகள் எனப் பல பகுதிகளையும் இந்த நூல் தொட்டிருக்கின்றது. என் வற்புறுத்தலின் பேரில்தான் முதல் தடவையாக நூல் விமர்சனம் ஒன்றை நிகழ்த்த மருதமுனை ஷம்சுல் - இல்ம் கல்லூரி மண்டபத்தில் அவர் மேடையேறியதாக எனக்கு ஞாபகம் காலப்போக்கில் தேர்ச்சி பெற்ற ஒரு விமர்சகர் ஆகி விட்டார். முற்றிலும் தகுதியும் பொருத்தமும் வாய்ந்த அவரை கல்முனை கலை - இலக்கிய நண்பர்கள் அமைப்பின் தலைவியாக ஏகமனதாக நாங்கள் தெரிவு செய்திருந்தோம். நாங்கள் சேர்ந்து இயங்கிய அந்த நாட்கள் பொன்னானவை. அன்புக்குரியவர்களின் மரணம் தரும் நிரந்தரப் பிரிவு என்பது மனதை உலுக்குவதுதான். ஆனாலும் யார் முந்தி எவர் பிந்தி என்ற கணக்குக்கு விடையறிய முடியாத சிற்றெறும்புகள் நாம்.

நாநூறு ஆண்டுகளுக்கு முன்னரே ஜோன்டன் (John Donne) என்ற ஆங்கிலேயக் கவிஞர் எழுதினார். அங்கே மாதா கோயில் மணி யாருக்காகத் துக்க ஒலி எழுப்புகிறதென்று விசாரிக்கப் போகாதே. அந்த மணி அடிப்பது உனக்காகவுந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "பத்தும் பதியமும்" தந்த பதிவிரதை!

கிழக்குமண் பெற்றெடுத்த மற்றுமொரு முதிசம் இன்று நம் மத்தியில் இல்லை. ஒவ்வொரு தீப்பள்ளயமும் அவர் கதை சொல்லும். அதை விட எம்முடன் குடும்ப உறவு. இன்ப துன்பங்கள் அனைத்திலும் பங்கெடுக்கும் உயர்ந்த உள்ளம் படைத்த அவர் இன்றில்லை.

அவர்தான் பழம்நெறும் பாண்டிருப்பு மண் பெற்றெடுத்த திருமதி.கமலாம்பிகை லோகிதராஜா அவர்கள்.

"லோகிதராஜா ரீச்சர்" அல்லது "சுபோவின் அம்மா" என்றுதான் நாம் வீட்டில் உச்சரிப்பது. அழைப்பது. எனது துணைவியாரின் நெருங்கிய நண்பி. அவர்களிருவரும் விஞ்ஞான ஆசிரிய அணியினர்.

கல்வித்துறையில் முலாந்தர அதிபரான இவர் தமிழில் பொதுப்பயிற்சியும் ஆங்கிலத்தில் விசேட பட்டமும் பெற்ற கல்வியியலாளராவார். பொதுத்துறையில் சமாதான நீதிவானாக கல்முனை கலை இலக்கிய நண்பர்கள் அமைப்பின் தலைவியாக கல்முனை லயன்ஸ் கழக உயர்பீட உறுப்பினராக சமூகத்தில் பல நடிபங்குகளை வகித்தவர்.

**நினைவுகள்!**

தீப்பள்ளயத்திற்குப் போனால் சுபோ வீட்டிற்குப் போகாமல வருவதில்லை. இது வழமை. பள்ளயத்தில் கடைத்தெருவைச் சுற்றிச்சுற்றி கால் கழன்றுவிழும் நிலையில் சுபோ வீட்டிற்கு வந்தால் எம்மை இன்முகத்துடன் வரவேற்பது அவரது தாயார் லோகிதராஜா ரீச்சர்.

"தம்பியே..." என அன்பாக பவ்யமாக அழைத்து கதைக்கத் தொடங்குவார். எதையும் ஒளிவு மறைவின்றி பேசுவார். எனது பிள்ளைகள் நித்திரை தூங்கும் வரை இனிக்க இனிக்க பேசுவார். இடையிடையே சுபோ விவே.... வேண்டாம் என்று கூறியும் சுவையான "ரீ" வரும். அதன்பிறகும் கதை தொடரும். இறுதியில் பிள்ளைகள் தொல்லை கொடுக்கத் தொடங்கியதும் அவ்விடம்விட்டு நீங்குவது. இது வருடாந்த வழமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தடவை எனது சம்மாந்துறை வலயத்தின் சொறிக்கல்முனை ஹொலிகுறோஸ் வித்தியாலயத்தில் ஒரு கருத்தரங்கிற்கு வளவாளராக அழைத்திருந்தேன். வருவதாக உடன்பட்டிருந்தார். இறுதியில் தவிர்க்க முடியாத ஒரு விடயத்தால் வரமுடியாத நிலை. அதை அவர் சொல்வதற்கு பட்ட கஸ்டம். வயதில் மூத்தவராக அறிவில் நிறைந்தவராக இருந்தும் ஒரு சாமானியமான ஒருவர் போன்று மன்னிப்புவரை கேட்டார்.

## நல்ல பண்பாளன்

பாராட்டுக்கள் பாராட்டப்பட வேண்டியவை மட்டுமன்றி சமூகத்தின் தொடர்நல் விளைவுகளுக்கு அவசியமானவை என்ற கருத்தை வலியுறுத்திய அவரை இவ்வண் ஒரு கணம் நினைத்துப் பார்க்கின்றேன்.

வாழும்போதே வாழ்த்த வேண்டும் என்ற சிந்தையுள்ள பன்முக ஆளுமைத்தன்மை அது. தன்னை மட்டுமே உயர்த்திப் பற்றிக் கொண்டிருக்கின்ற தற்கால மானிடர் மத்தியிலே பிறரை நினைந்து அவர்களை கனம்பண்ணி கௌரவமளிக்கின்ற உயர்பண்பை என்னவென்று சொல்வது? எனவே அடியேனின் நன்றியுடன் கூடிய முதல் மரியாதை அவருக்கு உரித்தாகட்டும்.

நல்லதோ கெட்டதோ முதலில் வீடு வந்து சிலவேளை அன்புமகள் சுபோவுடன் வந்து வாழ்த்துக் கூறுவதும் தேற்றுவதும் அவராகத்தானிருக்கும். உறவைத் தொடர்வதில் அவருக்கு நிகரில்லை.

பல ஊர்களையும் சேர்ந்த அன்பர்கள் இன்றும் அவரை அன்புடன் பக்திபூர்வமாக நேசிப்பதற்கு இவரது அன்பான அர்ப்பணிப்பான தன்னலமற்ற சேவையும் சுபாவமும் காரணமெனலாம்.

## குடும்பத்தலைவியாக...

குடும்ப உறவை இந்தக் காலத்தில் இப்படியும் ஒருவர் தொடர்வாரா என மூக்கில் விரல் வைத்து சிலாகிக்கும் அளவிற்கு அவரது உதவிகள் பரந்திருந்தன. அவர் இளவயதில் குடும்ப பாரத்தைச் சுமந்து அன்பு மக்களை நல்ல வண்ணம் வளர்த்தெடுத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய கால கட்டத்தில் மனிதப் பண்புகளை கடைப் பிடிப்பவர்கள் ஒரு சிலரே. அதனுள் அன்பு , அடக்கம், எளிமை, மனிதநேயம், தயாளகுணம், நேர்மை, கடமையுணர்வு மற்றவர்களை ஊக்குவித்தல் போன்ற பண்புத்தரங்களில் ஒருபடி உயர்வாக நின்று செயற்பட்டு வருவதனால் அவர் உயர்ந்தவராகவே கருதப்படுகிறார்.

இனிய சுபாவமும் புன்முறுவல் பூத்த முகமும் பரஸ்பர ஐக்கியத்தை வேண்டி நிற்கின்ற பண்பு இவருக்கேயுரித்தான குண இயல்புகளாகும். இவரிடம் ஏனையவர்கள் இவர் மீது வைத்துள்ள மதிப்பும் மரியாதையும் தனி.

இறுமாப்பு தற்பெருமை ஆணவம் தலைக்கனம் போன்ற தீய குணங்களுடன் திமிர் பிடித்து அலைகின்ற இன்றைய கால கட்டத்தில் இவர் விதிவிலக்காக இருந்தார்.

**ஆளுமை**

தனது ஆசிரிய சேவைக் காலத்தின் போது கல்வியில் மட்டுமன்றி நல்லொழுக்கமும் கட்டுப்பாடும் மனிதாபிமானம் மிக்கதொரு மாணவ பரம்பரையை உருவாக்கும் பணியில் அவர் காட்டிய ஆர்வம் அலாதியானது. பின்பு கல்வி நிருவாக சேவைக்கள் ஆங்கில பாட உதவிக்கல்விப் பணிப்பாளராக தன்னை ஈர்த்துக் கொண்டார்.

தன்னைநாடி வருபவர்கள் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்பதிலும் இனிய வார்த்தைகளைப் பிரயோகித்து தம்வசப்படுத்துவதிலும் அவருக்கு நிகர் அவரே. உடன் பழகும் அனைவருடனும் மிகப்பௌவியமாகப் பழகும் இவர் நல்ல சிந்தனையும் செயலூக்கமுள்ளவராவார். எவரும் இலகுவில் அணுகக்கூடிய இனிய சுபாவம் கொண்ட இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை மிக்கவர்.

தோற்றத்தில் சாந்தமும் பண்பில் அடக்கமும் பேச்சில் நிதானமும் அறிவில் நிறைவும் கொண்ட இவரின் பன்முக ஆளுமைத்தன்மை காரணமாக கல்விச் சமூகத்தினரால் மட்டுமன்றி ஏனைய சமூகத்தினராலும் பெரிதும் மதிக்கப்பட்டு போற்றப்பட்டு வருபவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பத்தும் பதியமும்" சிறு பதிவு

"கற்றவர்கள் எல்லோரும் சிறந்த சேவைகளை வழங்கியதுமில்லை. சிறந்த சேவைகளை வழங்கும் எல்லாரும் கற்றவர்களுமில்லை. என்ற வாக்கிற்கிணங்க நன்கு கற்றதுடன் நின்று விடாது மக்களுக்காக சிறந்த சேவைகளைச் செய்தவருமாவார்.

அவர் இலக்கியத்திலே புலமை மிக்கவர். பத்தும் பதியமும் என்ற கனதியான நூல் மூலம் பெற்றதாய் பெற்ற நாட்டுக்கு சிறந்த சேவையாற்றியமை துல்லியமாகத் தெரிகிறது. தான் பிறந்த மண்ணை பெரிதும் நேசித்திருக்கிறார். பாண்டிருப்பின் குறுக்கு வெட்டுமுகம் அதில் தெரிகிறது. அதன் வெளிப்பாடாக அந்நூல் திகழ்கிறது. நூலாக்கத்தின் போதான தேடல் அதிகமாகவிருந்திருக்கும். காரைதீவில் இத்தகையதொரு நூலை வெளியிடுவதில் முக்கியமான பங்களிப்பை வழங்கியவன் என்ற அடிப்படையில் இந்த வலியை நான் உணர்வேன்.

"பத்தும் பதியமும்" நூல் வெளியிட்ட பின்பு அதனை வீடுதேடி வந்து தந்தவர் அவர். அதில் வந்த ஒரு சிறு முரண்பாடு பற்றி என்னுடன் ஆழமாகப் பேசினார். கவலைப்பட்டார்.

இந்த நூலில் பாண்டிருப்பின் வேரும் விழுதுகளும் பதிவாயிருக்கின்றன. அதற்கான அவரது தேடலை ஆர்வத்வுத ஏனையோர் முன்னுதாரணமாகக் கொள்ள முடியும். பாண்டிருப்பின் வாழ்வியல் கோலங்களை ஆய்வு செய்வோருக்கு இந்நூல் வரப்பிரசாதமாகும்.

அவர் ஆத்மா சாந்தியடைய எனது குடும்பத்தின் சார்பில் இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**தேசமான்ய விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா J.P.(M.Ed) A.D.E.**
**தலைவர் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்**

பொதுச்செயலாளர் அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவை. பொதுச்செயலாளர் சமாதானத்திற்கான சமயங்களின் இலங்கைப் பேரவை (அம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரில் நாங்கள் கரைகின்றோம்....

"....... நவீன காலப்போக்கோடு அள்ளுண்டு செல்கின்ற நாம் நமது முன்னோரின் பாரம்பரியத்தை அறிந்து கொள்வது அவசியம். நமது சூழல், வரலாறு, உரிமை, சிறப்பு என்பவற்றை அறிந்து வாழ்தல் அனைவருக்கும் இன்றியமையாதது. அவை அழிந்தொழிந்து போகாமல் காப்பாற்ற நாம் முயல வேண்டும்....."

திருமதி.கமலாம்பிகை லோகிதராஜா அவர்கள் தனது "பத்தும் பதியமும்" நூலின் முகவுரையில் குறிப்பிட்ட விடயங்களே மேலே உள்ளவையாகும்.

நேற்றுவரை எம்முள் ஒருவராக வாழ்ந்து வந்த திருமதி லோகிதராஜா அவர்கள் 24.09.2015 இல் நமது முன்னோர்களில் ஒருவராக மாறிவிட்டது ஒரு துன்பகரமான நிகழ்வாகும். ஆனாலும் அவர் குறிப்பிட்டது போல நாம் நமது முன்னோரின் பாரம் பரியங்களை அறிந்து கொள்வதுடன், அவற்றை வாழ்வில் படிப்பினைகளாக்கிக் கொள்வதும் எமது வாழ்வை வளம் படுத்த உதவும். இவ்வகையில் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த" திருமதி லோகிதராஜா அவர்களின் வாழ்க்கைச் சுவடுகளும் அவர் விட்டுச் சென்ற எச்சங்களும் எமக்கு வழிகாட்டிகளாக உள்ளனவென்றால் அது மிகையில்லை.

இவருடைய இல்லற வாழ்வின் ஆரம்பம் இன்பமானதாக இருந்த போதும் அவ் வாழ்க்கை இவருக்கு தொடர்ந்து நிலைத்திருக்கவில்லை. நான்கு குழந்தைகளைப் பெற்றெடுத்ததும் தனது 39 ஆவது வயதில் அகால மரணமடைந்த தனது வாழ்க்கைத் துணையின் இழப்பினில் நிலை குலைந்து போனார் கமலாம்பிகை அம்மையார். கணவனை இழந்த அவர் குழந்தைகளை வளர்த்து ஆளாக்கும் பொறுப்புடன், குடும்ப பாரத்தையும் சுமக்கும் நிலைக்கு ஆளானார். கல்லும் முள்ளும் நிரம்பிய கரடுமுரடான பாதையில் இவர் பயணிக்க வேண்டியிருந்தது. அப்பயணத்தில் இவர் துணிச்சலுடன் முன்னோக்கிப் பயணித்தார், வெற்றியும் கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தந்தையாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இளமையிலேயே ஆசிரியத் தொழிலில் இணைந்து கொண்ட இவர் 1985 இல் யாழ் பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழியில் விசேட பட்டம் பெற்றார். இதே வருடத்தில் கல்வியமைச்சினால் முதலாம் தர அதிபர் நியமனமும் இவருக்குக் கிடைத்தது. இவர் இப் பிரதேசத்திலுள்ள பல பாடசாலைகளில் ஆசிரியராகவும், உதவி அதிபராகவும் கடமை புரிந்தார். இறுதியாக கல்முனைக் கல்வி வலயத்தில் ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகராக உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமை புரிந்து, தனது சுய விருப்பில் உரிய வயதிற்கு முன்னரேயே ஓய்வு பெற்றார்.

இலக்கிய உலகில் இவரின் பணிகள் அளப்பரியன. பல்வேறு கட்டுரைகளை எழுதியுள்ள இவர் சில ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். 1994 இல் இலங்கை அரசின் கலாசார அமைச்சினால் கல்முனையில் நடாத்தப்பட்ட தமிழ் இலக்கிய சாகித்திய விழாவின் போது இவரால் எழுதிப்படிக்கப்பட்ட "கல்முனைப் பிரதேச அவைக் காற்றுக் கலைகள்...." என்னும் ஆய்வுக்கட்டுரை பலரது பாராட்டையும் பெற்றது. இவ்வாறான தொடர் செயற்பாடுகள் எழுத்துலகில் இவருக்கு நிலையான இடத்தைப் பெற்றுக் கொடுத்தன.

இப் பிரதேசத்தில் திறம்பட இயங்கிக் கொண்டிருந்த "கலை இலக்கிய நண்பர்கள்" அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டதுடன், 2009 இல் தலைமைப் பொறுப்பையேற்று தனது இலக்கியப் பணியை விரிவுபடுத்தினார். இதனால் ஏற்பட்ட உந்துதலினால் உருவானதே இவரது படைப்பில் உருவான "பத்தும் பதியமும்" என்னும் பாண்டிருப்பு வரலாறு கூறும் நூல். இந்நூலின் வெளியீடு கட்டுரையாசிரியரின் தலைமையில் 19-05-2012 இல் கல்முனை கிறிஸ்த இல்லத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

திருமதி லோகிதராஜா அவர்கள் இறக்கும் போது அவரக்கு வயது 76. அவரைப் பற்றி இப் பிரதேசத்திலுள்ளவர்கள் மட்டுமன்றி, நாட்டின் பல பாகங்களிலும் உள்ளோர் பலவாறு அறிந்து வைத்துள்ளார்கள் ஒரு ஆசிரியையாக, அதிபராக. சிறந்த வாசகராக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பாளியாக, பொதுச் சேவகியாக. இன்னும் பலவாறாக இவர் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றுள்ளார். இப்பிரபல்யமும், புகழும் இவருக்கு இலகுவில் கிடைக்கவில்லை. இவருடைய கடின உழைப்பும் விடா முயற்சியுமே இவற்றிற்குக் காரணங்களாக அமைந்தன.

நோய்வாய்ப்பட்டு படுக்கையில் நீண்டகாலம் ஒருபோதும் இவர் படுத்ததில்லை. பிள்ளைகளுட்பட எவரையும் சிரமத்திற்கு உட்படுத்துவதை இவர் விரும்பவில்லை. இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பாக 20.09.2015 இல் கிறிஸ்த இல்லத்தில் நடைபெற்ற அமரர் சண்முகம் சிவலிங்கம் அவர்களின் "காண்டாவனம்" நூல் வெளியீட்டில் பங்கு பற்றிச் சிறப்புப் பிரதியொன்றைப் பெற்ற வைபவமே இவர் பங்கு பற்றிய இறுதி நிகழ்வாக அமைந்தது.

திருமதி லோகிதராஜா அவர்கள் இப்போது நம்முடன் இல்லை. சாதாரண பெண்களிலிருந்தும் மாறுபட்ட வாழ்க்கையை வாழ்ந்து காட்டிச் சென்றவர் அவர். பிரபல எழுத்தாளர் உமா வரதராஜன் 'பத்தும் பதியமும்' நூலில் குறிப்பிட்டது போல, "வீட்டின் சமையல் அறைகளுடன் தங்களைக் குறுக்கிக் கொண்ட நம்மூர் பெண்களிலிருந்தும் வேறுபட்டு அதிலிருந்து வெளியேறி சமூக செயல்பாடுகளுடன் கல்வி, கலை, இலக்கியத்துறைகளுடன் தன்னைப் பிணைத்துக் கொண்ட முன்னோடி திருமதி லோகிதராஜா".

*அன்பினில் தாயாய் அறிவுரைக்கோர் ஆசிரியையாய்*
*இன்பமுடன் எமை வளர்த்த எங்கள் தெய்வம்*
*விண்ணோடு நோக்கி விரைந்தோடிச் சென்றதனால்*
*கண்ணீரில் நாங்கள் கரைகின்றோம்.......*

அவரை இழந்து தவிக்கும் அவரது பிள்ளைகளுக்கும், உறவினர்களுக்கும் ஆறுதல் சொல்வதுடன் நாமும் அவரது இழப்பிலிருந்து மீண்டு ஆறுதலடைவதைத் தவிர வேறு என்னதான் வழி இருக்கிறது.....?

**எஸ்.அரசரெத்தினம்**
*அகில இலங்கை சமாதான நீதவான்*
*கல்முனை-02.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசைக்க அழிக்க முடியாத ஆளுமை

# திருமதி. லோகிதராஜா

லோகித ராஜா
இறையடி யெய்திவிட்டார்
என்ற செய்தி
எனை
ஆட்டி அசைத்து
உணர்வறச் செய்தது

*****

உணர்வு வந்ததும்
அவர் பற்றிய
உணர்வுகள்
ஊசலாடின

*****

கல்முனை கல்வி வலயம்
இன, மத, பேதம் இல்லாது
கடமையாற்றிய
கல்வியதிகாரியவர்

*****

இங்கிலீஸ் மொழியில்
அவருக்கு நிகரே இல்லை
தமிழ்மொழியும் அப்படியே
கலை, கலாசாரம்,
எழுத்து இலக்கியம்
என ஏகப்பட்ட
ஆற்றல் அவருக்கு

*****

கடுகடுத்த முகத்தோடு
அவரை நான் கண்டதேயில்லை.
கூட்டத்திற்கு அழைத்தால்
ஐரோப்பியர்கள் போல
உரிய நேரத்திற்கு வருவார்
ஐரோப்பிய மொழி
ஆதிக்கம் அவரிடம்

புன்முறுவல் பூத்து
பூமிக்கு ஏதும் நடந்து விடாது என
அடிமேல் அடி வைத்து
அமைதியாக நடந்து வருவார்
உயர்ந்த தோற்றம் எதிலும்.

ஆண்டாண்டு தோறும்
அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ?
ஆண்டவனிடத்திலும் அவர்
ஆளுமை மிக்கவராகவே
இருப்பார் எனும் எண்ணம்
எமைச் சாந்தியடையச் செய்கிறது.
அவரது குடும்பத்தாருக்கு
எனது
ஆழ்ந்த அனுதாபங்கள்

*மணிப்புலவர்*
**மருதூர்- மஜீத்**
*ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர்*
*கல்முனை.*
*10-10-2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டை தீட்டப்படாத வைரம்

எழுத்தாளர் உமாவரதராஜனின் வார்த்தைகளிலே கூறுவதாயின் "வீட்டின் சமையலறைகளுடன் தங்களைக் குறுக்கிக் கொண்ட எங்களூர்ப் பெண்களிலிருந்து வேறுபட்டு வெளியேறி சமூக செயற்பாடுகளுடன் கல்வி நிலை இலக்கியத் துறைகளுடன் தன்னைப் பிணைத்துக் கொண்ட முன்னோடி யான அமரர். திருமதி. கமலாம்பிகை லோகிராஜா அவர்களை 1960 களில் எனது மாணவப் பருவத்திலேயே மட்டக்களப்பு, வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் விடுதியிலே தங்கியிருந்து சமகாலத்தில் என்னுடன் படித்த பள்ளி நண்பன் கதிர்காமநாதனின் அக்கா என்ற அளவில் மட்டுமே அறிந்திருந்தேன். அவரை நேரில் கண்டதோ பேசியதோ கிடையாது.

பின் 1970களில் நான் கல்முனை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமை புரிந்த காலத்தில் கதிர்காமநாதனின் அக்கா இவர்தான் என நேரில் கண்டேன். ஆனால் அவருடன் எந்த ஊடாட்டமும் எனக்கு இருந்ததில்லை. பின்னாளில் அவரின் இன்னொரு சகோதரனான பாலசண்முகம் (பாலா) ஆள்புலசிவிப்பொறியியல் அமைப்பில் (Territorial Civil Engineering Organization) என்னுடன் சக ஊழியராகக் கல்முனையில் தொழில் புரிந்தார்.

அவரின் கணவர் அமரர்.திரு.க. லோகிதராஜா அவர்கள் எனது மனைவியின் தமையனார் எஸ்.எஸ்.மனோகரனின் நெருங்கிய பாடசாலை வகுப்பு நண்பர். எனது மனைவியின் இன்னொரு தமையன் எஸ்.ரவீந்திரராஜ் (ரவி) இ.போ.ச.வில் பணிபுரிந்த காலத்தில் அவருக்கு முன்பே இ.போ.ச.வில் இணைந்து சாலைப்பரிசோதகராகக் கடமையாற்றிய லோகிதராஜா அவர்கள் எனது மைத்துனர் ரவிக்கு வழிகாட்டும் "அண்ணன்" ஆக இருந்தார். எனது மனைவியின் குடும்பத்தாருடன் சேர்ந்து லோகிதராஜா அண்ணன் என்று தான் நான் அழைப்பேன். லோகிதராஜா அண்ணன் அவர்களின் மட்டக்களப்பு சூரியா ஒழுங்கை வீட்டிலிருந்து வருடா வருடம் பலாப்பழ சீசன் காலத்தில் நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய வருக்கைப் பலாப்பழமொன்று தவறாது மட்டக்களப்பு முகத்துவாரம் வெளிச்ச வீட்டிற்கு அருகில் அமைந்திருந்த எனது மனைவியின் தாயதி வீட்டிற்கு வந்திறங்கும் அப்பழத்தின் இனிப்பான சுளைகளைச் சுவைத்த அனுபவம் நிறைய எனக்குண்டு. மட்டக்களப்பு சிங்களவாடிப் பலாப்பழம் ஒரு சிறப்புத்தான். அதே போன்று "ஜோக்ஸ்" அடித்து மற்றவர்களைச் சிரிக்க வைப்பதில் லோகிதராஜா அண்ணன் சுவையான மனிதர். மேலும் எனது தொழில்துறைசார் நண்பர் விவேகானந்தராஜாவின் (விவே) மாமியாராகவும் பின்னாளில் அமரர். கமலாம்பிகை லோகிதராஜா அவர்கள் எனக்கு நெருக்கமானார். அன்னாருடனான எனது ஆரம்பகால அறிமுகம் இவ்வாறுதான் அமைந்திருந்தது.

பின்னாளில் 1990களின் பின்னர் கொழும்புத் தமிழ்ச்சங்க உறுப்பினராக அவர் சக உறுப்பினரான கொழும்பில் வசித்த திருமதி.சிவதாச சௌந்தரி விஜயரத்தினம் அவர்கள் சகிதம் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டங்களில் அதற்கென்றே பாண்டிருப்பிலிருந்து கொழும்புக்குப் பயணித்துக் கலந்து கொண்ட நிகழ்வுகளினூடாக அக்காலத்தில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் தீவிர செயற்பாட்டாளனாக (ஆட்சிக்குழு உறுப்பினர்-நூலகச் செயலாளர்-துணைப் பொதுச்செயலாளர்-இலக்கியச் செயலாளர்-"ஓலை" ஆசிரியராக) விளங்கிய எனக்கு அன்னாருடனான கலை இலக்கிய உறவு கருக்கொண்டது.

கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரியின் பிரதி அதிபராக விளங்கிய சங்கைக்குரிய சகோதரி எம்.லொறிண்டா அவர்கள் ஓய்வு பெற்றதையொட்டி 1993இல் வெளியிடப்பெற்ற "அணையாவிளக்கு" எனும் மலரில் திருமதி.லோகிதராஜா அவர்கள் தீட்டியிருந்த "கல்முனைப் பிரதேச அவைக்காற்றுக் கலைகள் எனும் தலைப்பிலான கட்டுரையைப் படிக்க நேர்ந்தபோதான் அன்னாரின் கலை இலக்கிய ஆர்வம், ஆளுமை, ஆய்வுப்புலம், தேடல், ஆற்றல், அர்ப்பணிப்பு ஆகியவற்றை என்னால் நேரடியாகத் தரிசிக்க முடிந்தது. இக்கட்டுரையானது விரிவுபடுத்தப்பட்டு இற்றைப்படுத்தப்படுமாயின் எதிர்காலச் சந்ததிக்குச் சிறந்ததொரு கலை இலக்கிய ஆய்வு ஆவணமாகப் பயன்படும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி.லோகிதராஜா அவர்கள் தமிழில் புலமை மிக்கவர் மட்டுமல்ல ஆங்கில இலக்கியங்களுடனும் பரிச்சயமுள்ளவராகத் திகழ்ந்தார். மணி அடித்ததும் நேரசூசிப்படி வகுப்பறைகளுக்குச் சென்று கடமைக்காகப் பாடங்களைச் சொல்லிக் கொடுத்து விட்டு பின்பு மணி அடித்ததும் வகுப்பறையை விட்டு வெளியேறி வருகின்ற ஆசிரியர்களைப் போல் அல்லாமல், ஆசிரியராகப் பணி புரிந்த காலதில் மாணவர்களை வழிப்படுத்தும், நெறிப்படுத்தும் - எதிர்காலத்தில் அவர்களை நல்ல பிரஜைகளாக உருவாக்கும் நல்லாசானாகத் திகழ்ந்தார். மாணவர்களுக்குப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கும் போதும் அவர்களைப் புறக்கிருத்தியங்களில் ஈடுபடுத்தும் போதும் நடித்தும் - செய்து காட்டியும் - உடல்மொழி மற்றும் சைகைகளால் உணர்த்தியும் மாணவர்களின் மனதில் விடயத்தைப் பதியவைக்க தேர்ந்த ஆசிரியவாண்மை அவரிடம் இயல்பாகவே இருந்தது. எப்போதும் புன்னகை தவழும் வதனத்தாலும் அன்பாகவும் பண்பாகவும் இங்கிதமாகவும் மெதுவாகவும் அளவாகவும் உரையாடும் அவருடைய இனிய சுபாவத்தாலும் மாணவர்கள், சக கல்வி ஆசிரியர்கள் - கடமையாற்றிய பாடசாலை அதிபர்கள் - பெற்றோர்கள் - காலித்திணைக்கள அலுவலர்கள் - உற்றார் உறவினர்கள் - நண்பர்கள் - ஊர்மக்கள் என்று அனைவரையும் வசீகரித்திருந்தார். அன்பினால் அனைவரையும் ஆட்கொண்டிருந்தார். நடிப்பாற்றலும் நாடகப்புலமையும் அவரிடம் ஊறியிருந்த உணர்வுகள், பேச்சாற்றல் அவரது ஆளுமையின் பிறிதொரு பரிமானம்.

நான் தலைவராக விளங்கும் "கண்ணகி கலை இலக்கியக் கூடல்" அமைப்பின் ஏற்பாட்டில் 2011இல் ஆரம்பித்து வருடந்தோறும் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு கிராமங்களில் நடாத்தப்பட்டு வரும் கண்ணகி கலை இலக்கிய விழாத் தொடரின் இரண்டாவது விழாவான "கண்ணகி கலை இலக்கிய விழா - 2012" 28, 29. ஜூலை 2012 ஆகிய தினங்களில் மட்/ புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற போது 28 ஜூலை 2012 சனிக்கிழமை இடம்பெற்ற முதலாம் நாள் மாலை அமர்வு-இயல் அரங்கு-சேரன் செங்குட் முன் அரங்கில் சிறப்பு அதிதிகளில் ஒருவராகக் "கல்முனை கலை இலக்கிய நண்பர்கள்" அமைப்பின் தலைவரான திருமதி.கமலாம்பிகை லோகிதராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும் கலந்து சிறப்பித்ததுடன் சிறந்த சிற்றுரையொன்றினையும் ஆற்றியிருந்தார். பழந்தமிழ் இலக்கியங்களுடன் அவருக்கிருந்த பரிச்சயம் அந்த உரையில் பளிச்சிட்டதைப் பலரும் சிலாகித்தனர்.

2012இல் தனது ஊரைப்பற்றி (பாண்டிருப்பு) அவர் எழுதி வெளியிட்ட "பத்தும் பதியமும்" எனும் நூல் அரிய ஆய்வு நூல் ஆகும். "நான் சுமந்து பின் என்னைச் சுமக்கும் பிள்ளைகளுக்கு" எனும் வரிகளால் அந்நூலினை அவர்தம் பிள்ளைகளுக்குச் சமர்ப்பணம் செய்திருந்தமை உணர்வு பூர்வமானது. இந்நூல் வெளியீட்டிற்கான அழைப்பிதழை எனக்குச் சேர்ப்பித்தது மட்டுமல்லாமல் அதற்கும் மேலதிகமாகத் தொலைபேசியில் "தம்பி! கட்டாயம் வரவேண்டும்" என்று அன்போடு அழைத்து அவ்விழாவில் நான் பங்கேற்றது இப்போது என் நினைவில் எழுந்து என் கண்களைப் பனிக்கச் செய்கின்றது. அவ்விழாவில் உரையாற்றியாற்றியவர்கள் எல்லோரும் அவரைப் புகழ்ந்து பேசிய போதெல்லாம் சங்கோஜந்தில் அவர் சங்கடப்பட்டதையும் நான் நேரில் கண்டேன். "என்ன தம்பி இவர்களெல்லாம் என்னைப்பற்றி புளுகித் தள்ளுகிறார்கள்" என்று என்னிடம் காதுக்குள் சலித்தும் கொண்டார். பன்முக ஆற்றல்கள் அவரிடம் பொதிந்திருந்த போதும் தன்னடக்கம் மிக்கவராகத் திகழ்ந்தார்.

அரச சேவைக் காலத்தில் ஆசிரியராகவும், உப அதிபராகவும், தொலைக்கல்விப் போதனாசிரியராகவும் - ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் அவர் ஆற்றிய கல்விசார் பங்களிப்புகள் அவரை ஒரு சிறந்த கல்வியியலாளர்களாகக் கவனிக்கச் செய்தன. கல்முனை கலை இலக்கிய நண்பர்கள் அமைப்பின் தலைவியாக அவர் பங்களித்த கலை இலக்கியச் செயற்பாடுகள் கணிப்புக்குரியவை. கல்முனை லயன்ஸ் கழக உறுப்பினரான அவரது சமூகச் செயற்பாடுகளும் சங்கைக்குரியனவே.

இளமையிலேயே தனது கணவனை இழந்துவிட்டதன் காரணமாக அவர்மீது விழுந்த குடும்பச் சுமை அவரிடமிருந்த கலை இலக்கியப் படைப்பாற்றலை முழுமையாக வெளிப்படுத்தக் கூடிய அவரது செயற்பாடுகளை மட்டுப்படுத்திற்று என்றே அவரை மதிப்பீடு செய்ய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் தனது பிள்ளைகளின் எதிர்காலத்திற்கான வாழ்வாதாரங்களை வளமுடன் அவர் ஏற்படுத்திக் கொடுத்த பின்னரும் அரச சேவையிலிருந்து அவர் ஓய்வு பெற்ற பின்னரும் அவர் மேற்கொண்ட கலை இலக்கியச் செயற்பாடுகள் அவரை இன்னார் என்று இனம் காட்டிற்று. இளமையிலேயே கணவனை இழந்ததால் தனித்துநின்று குடும்பச் சோலிகளைச் சுமக்க வேண்டியேற்றப்பட்ட அன்னாரது வாழ்க்கைக் கோலம் அவரது பன்முக ஆளுமைகள் முழுமையாக முழு உலகும் அறியும்வண்ணம் வெளிவராதபடி சற்று மட்டுப்படுத்தியும் மறைத்தும் விட்டன என்றே எனது பார்வையில் அவரை நான் மதிப்பீடு செய்கின்றேன். ஆம்! அவர் ஒரு பட்டை தீட்டப்படாத வைரம். அவரது வாழ்வும் பணிகளும் ஆளுமையும் ஆய்வுக்குட்படுத்தப்படும் போது எதிர்காலத்தில் அவர் நிச்சயம் ஒளிர்வார்.

அன்னாரது மரணச்சடங்கு நடைபெற்ற முதல்நாள் இரவ பொத்துவிலில் எனது மூத்த அக்காவின் கணவர் காலமாகி விட்ட காரணத்தால் அமரர்.திருமதி.க.லோகிதராஜா அவர்களின் பூதவுடலுக்கு எனது இறுதி அஞ்சலியைச் செலுத்த இயலாமற் போனமை எனது துரதிஸ்டமே.

**செங்கதிரோன் த. கோபாலகிருஸ்ணன்**
ஆசிரியர் "செங்கதிர்"

607, பார்வதி, மட்டக்களப்பு.
077-1900614





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2013 கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், காணி, காணி அபிவிருத்தி போக்குவரத்து அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 'பத்தும் பதியம்' எனும் நூலிற்கான விருது வழங்கியபோது...



2013 எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கிய 'தமிழியல் விருது'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முட்களைக் கிரீடமாக்கினாய்

ஒரு முறை நின்று
துடித்துக் கொண்டது இதயம்
ஓர் கணத்தில்
உறைந்து போனேன்

உன்னை நாம் இழந்து போனோமா?
தொலைந்தால் தானே எதையும்
நாம் இழப்பதற்கு

எப்போதுமே
மெல்லிதாய் படியும் சிறு புன்னகை
மனந்திறந்து பழகும் உயர் பண்பு
மற்றவர் மனதில் இதமாய் பதியும்
உன் அன்பான உறவு
துணிவும் முனைவும் கொண்டு
வாழ்வில்
பெற்றுவிட்ட வெற்றிப் பதிவு
கற்று முதிர்ந்தும்
கர்வம் இல்லா எளிய நடை
இப்படி
எத்தனை விம்பங்கள் உன்னில் விட்டுச் சென்றாய்

எப்படி உன்னை மறந்து போவோம்?
எப்படி உன்னை இழந்து போவோம்?

வாழ்வின் பயணத்தில்
தனியாக நின்ற போது தயங்கவில்லை
கலங்கித் துவளவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்களைக் கிரீடமாக்கினாய்
சுமைகளைச் சிலுவையாக்கினாய்
கால்கள் கடக்க கல்லும் முள்ளும் கடந்தாய்
இன்று


அந்தத் தனிமரம் தோப்பாய் போனது
விழுது (பதித்து) எறிந்து பூக்கள் சொரியும் சோலையானது
நீ
விட்டுச் சென்ற விதைகள் கூட
பெரு விருட்சமாய் ஆகிப் போனது
எப்படி உன்னை இழக்க முடியும்

உதிர்ந்த போதும்
இலைகள் இறந்து போவதில்லை
மண்ணில் விழுந்து
உரமாய் தன்னை அர்ப்பணித்துக் கொள்கின்றது.

**நீயும் இறந்து போகவில்லை**
**உரமாய் நின்று உறவுகளைக் காக்கின்றாய்**

நினைவுடன்

**தம்பி பரமேஸ், நிதி**
**லண்டன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நினைவிடை தோய்ந்தபோது...

காலச் சுழற்சியில் பூக்கும் பூவெல்லாம் மண் வீழ்வது யதார்த்தம். உலக நியதியும் கூட அழகும் வாசனையும் மலர் மண்ணில் வீழ்ந்த பின்பும்கூட எம்முள் மனம் கொள்ளும். எம்முள் எம் நினைவுகளில் என்றுமே வாசம் வீசுவீர்கள். நாமும் மண் விழும்வரை கண் நிறைக்கும் உருவம் உங்களது எனதூரில் என் உறைவினனாய், அயலவனாய் வாழ்ந்தவர் நீங்கள். சுனாமியின் பின் நாமெல்லோரும் அல்லலுற்றவர்கட்காய் உழைத்த காலம் நினைவிற்கு வருகின்றது.

போர்க்காலப் பொழுதுகளில் யாழ்ப்பாண மருத்துவ பீடத்திலிருந்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் வரை உங்களைச் சந்திப்பதற்காய் வருவேன். நண்பர்களைத் தவிர யாருடனும் தொடர்புபட முடியாக் காலப்பொழுதொன்றில் அம்மாவாய், அக்காவாய் உங்களை உணர்ந்திருக்கின்றேன். என்ன மனே, எனக்கேட்டு உறவுகள் பற்றிப்பேசி படிப்புத் தொடர்ந்து காலங்கள் ஆறுதலானவை.

சேர்ந்து பிரயாணித்து, சேர்ந்து உணவு உண்டு, எம் நலனை நீங்களும் உங்கள் நலனை நானும் என் கணவரும் கவனித்த காலங்கள் பசுமையானவை. எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்து சுகம் விசாரிக்கும் சிலரில் நீங்கள் முதன்மையானவர். சுபோவுடன் சேர்ந்து வந்து என் அம்மா, தங்கைகளுடன் பேசிக் கொண்டிருப்பீர்கள். அந்த இரவுகள் நீளமானவை. நினைவில் நிற்பவை.

தனித்து நின்று, திடமாய் உழைத்து உங்கள் குழந்தைகட்கு நல்வழியும், உயர்வும் காட்டி ஓய்ந்த பொழுதொன்றில் உங்கள் வாசம் விட்டுச் சென்றிருக்கின்றீர்கள். எங்கள் ஊரில் கல்விப்புலத்திலும் இலக்கியத்திலும் நிறைந்து வாழ்வீர்கள்.

என் ஞாபகங்களில் உங்களுக்கென்றொரு இடம் எந்நாளும் இருக்கும். உங்கள் குழந்தைகட்கும், உறவுகட்கும், நண்பர்களுக்கும் காலம் உங்கள் இழப்பின் காயம் ஆற்றும்.

*- எல்லாம் வல்ல இறையிடத்தில் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கின்றேன் -*

*உங்கள் இழப்பின் வலியுடன*

**Dr. புஸ்பலதா லோகநாதன்**

பாண்டிருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது நண்பி மதிப்பிற்குரிய
## திருமதி.கமலாம்பிகை லோகிதராஜா

27-09-2015 காலை 11.00 மணியிருக்கும் சாஹிறா கல்லூரி உப அதிபரும் எனது மாணவருமான ஜனாப் A.B. முஜீன் என்பவரின் அழைப்பு திருமதி.கமலாம்பிகை லோகிதராஜா இறையடி சேர்ந்ததாகவும் ஞாயிறு மாலை 4.00 மணிக்கு இறுதிக்கிரியை நடக்கப்போவதாகவும் தொலைபேசியில் கூறினார். செய்தி கேட்டதும் திடுக்கிட்டு விட்டேன். என் கண்களில் கண்ணீர் மல்கியது. என்னால் என்னை கட்டுப்படுத்த முடியவில்லை. ஆண்டவன் செயலுக்கு அடிபணிந்து தானே ஆக வேண்டும்.

1962இல் மட்டக்களப்பு அரசடி கலவன் பாடசாலையில் இருநாள் சாரணிய பயிற்சி நடைபெற்றது. அதில் நானும் திருமதி.க. லோகிதராஜாவும் பங்கேற்றோம். இதுதான் எமது முதல் சந்திப்பு 1969இல் பலாலி ஆங்கில விசேட பயிற்சிக்கு போட்டிப் பரீட்சை மூலம் இருவரும் தெரிவாகி இருந்தோம்.

கல்லூரியில் மிகவும் திறமையான - மற்றவர்களுக்கு முன்மாதிரியான மாணவியாகத் திகழ்ந்தார். இவர் ஒரு சிறந்த விளையாட்டு வீராங்கனை குண்டெறிதல், பரிதிவட்டம் வீசுதல், ஈட்டி எறிதல், இல்ல விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடங்களைப் பெற்றார்.

இவரது கணவர் மிகவும் கண்ணியுமானவர். அன்பாகப் பழகுவதில் அவருக்கு நிகர் அவர்தான். எனது மனைவி பிள்ளைகளோடு அவர்களின் பாண்டிருப்பு வீட்டுக்குச் சென்றுள்ளோம். அவர்களும் எங்களது சாய்ந்தமருது வீட்டுக்கு வருமை தந்துள்ளனர். போக்குவரத்து கஷ்ட காலத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு பட்டதாரியானார். எனது அரசியல் செல்வாக்கை உபயோகித்து பாடசாலை நியமனம், இடமாற்றம் போன்றவற்றை சிலருக்கு செய்திருக்கிறேன். கல்முனை முஹமட் மகளிர் கல்லூரிக்கு ஆங்கில ஆசிரியையாக மாற்றம் பெற்றுக் கொடுக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. 1978 வரை அங்கு அனைவரின் மதிப்பைப் பெற்று நல்லாசிரியையாக திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் அனைவருக்கும் திருமணம் செய்வித்து பேரப்பிள்ளைகளோடு வாழும் பாக்கியத்தைப் பெற்றார். இரண்டாவது மகளின் மகள் வைத்தியம் படிப்பதற்கு பல்கலைக்கழகத்திற்கு தெரிவானதில் மிக்க மகிழ்ச்சியடைந்தார். நான் தற்போது கொழும்பில் வசிப்பதால் கல்முனை வந்ததும் முதல் வேலையாக பாண்டிருப்புக்குச் சென்று அவரைச் சந்தித்து திரும்புவேன்.

பலாலி ஆசிரியர் பயிற்சியின் போது அடிக்கடி ஒரு வசனம் பாவிப்பார்கள். அதாவது பலாலி வாழ்க்கை படலை மட்டும் என்று. ஆனால் எங்கள் நட்பு இறுதி வரையிலிருந்தது.

நான் எப்போதும் “கமறா வைத்திருப்பது எனது பழக்கம். பலாலியில் எனது “கமறா”வால் எடுத்த பட “அல்பம்” என்னிடமிருந்தது. இந்த அல்பத்தை இவர் உயிரோடு இருக்கும் போது பார்த்துவிட்டு சில படங்களை எடுக்க வேண்டும் என்று கூறினார். இவவின் மறைவுக்குப் பின், அவ்வல்பத்தைக் கொண்டு வந்து கொடுத்தேன். எல்லோரும் பார்த்தபின், முக்கியமான படங்களை எல்லாம் இவவின் மூத்தமருமகன் தனது கையடக்க போன் மூலம் பதிந்து கொண்டு அல்பத்தைத் தந்தார். இந்த “அல்பம்” இருக்கும் வரை இவருடைய ஞாபகமும் என்னோடிருக்கும்.

இவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

**A.K.அபூபக்கர் வெல்வை** SLEAS-JP
ஓய்வுநிலை பிரதி அதிபர்
ஸாஹிறா தேசிய பாடசாலை, கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம் எல்லோருக்கும் நிச்சயிக்கப்பட்ட ஒன்று தான். ஆனாலும் லோகிதராஜா ஆசிரியை மரணித்து விட்டார் என்ற செய்தி சற்று நேரம் என்னை நிலை குலைய வைத்து விட்டது. எனது சிநேகிதி ஜெயந்தி திருச்செல்வம் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு துன்பக்குரலில் இந்தச் செய்தியை எனக்குத் தெரிவித்த போது நான் ஸ்தம்பித்து விட்டேன். ஒரு நித்திரையைப் போல மரணம் அவரை அணைத்துக் கொண்டது என்ற செய்தி எனக்கு மட்டுமல்ல கார்மேல் பாத்திமாக்கல்லூரியில் 1980 தொடக்கம் 1990 வரை கல்வி பயின்ற அனைவரையும் திகைக்க வைத்திருக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

எனது பள்ளிக்காலத்தில் நான் கண்ட ஆளுமை மிக்க பெண்மணி லோகிதராஜா ஆசிரியை அவர்கள். அவருடைய உயரமும் உடல் வாகும் கம்பீரமான தோற்றமும் எவருடைய பார்வையையும் ஈர்க்கும் தன்மை கொண்டன. ஆங்கில அறிவும் எழுத்தாற்றலும் ஒருங்கே அமையப் பெற்ற அவர் தமிழ்த்தினப் போட்டிகளின் போது எழுத்தாக்கங்களுக்கு நடுவராக இருந்து மாணவர்களைத் தெரிவு செய்வதுண்டு. அக்கால கட்டத்தில் ஓர் நாள் எனது சக மாணவியொருவர் எழுதிய நாடகப் பிரதியொன்றை வாசித்து விட்டு, “ஓர் இளம் பெண் திடீரெனக் கணவரை இழந்து விட்டு சட்டென்று சகஜ வாழ்க்கைக்குப் பழக்கப்படுவது சாத்தியமில்லை. உங்களுடைய கதாநாயகியை நீங்கள் அப்படிப் படைத்திருக்கின்றீர்கள். அது நடைமுறை வாழ்வுக்குப் பொருத்தமாக இல்லை என்று கூறிவிட்டு சற்று நேரம் அந்த மாணவியை உற்றுப் பார்த்தவர், “ஏனென்றால் அந்த வேதனையையும் எதிர்பாராத ஏமாற்றத்தையும் நான் சந்தித்தேன். அந்த சோகத்திலிருந்து மீண்டு வருவது எவ்வளவு சிரமம் என்பதை நான் அனுபவித்திருக்கின்றேன். சின்னஞ்சிறு குழந்தைகளை வளர்த்து சமூகத்தில் நல்ல நிலையில் வாழ வைக்கும் பொறுப்பை தனியாக சுமப்பதென்பது அவ்வளவு இலகுவான விடயமல்ல” எனக் கூறினார். அப்போது அவருடைய கண்களில் நீர் கோர்த்திருந்ததை நான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானித்தேன். அன்றைய நாள் முழுவதும் எனக்குள் ஏதேதோ எண்ணங்கள் பயணித்தன. அன்றிலிருந்து அவரை நான் பரிவோடு பார்க்கத் தொடங்கினேன்.

பாண்டிருப்புக் கிராமத்தின் மூத்த எழுத்தாளர்களோடு நெருங்கிய தொடர்புகளை பேணி வந்த ஆசிரியை அவர்கள் புத்தக வெளியீடுகளின் போது அவர்களோடு இணைந்து செயற்படுவதையும் அவர்களைப் பாராட்டுவதையும் கண்டிருக்கின்றேன். எழுத்தின் மீது அவர் கொண்டிருந்த மோகம்தான் அவர் எழுதிய "பத்தும் பதியமும்" எனும் நூலாக வெளிவந்தது. "பாண்டிருப்பு" எனும் கிராமத்தின் வரலாறை தமிழ் கூறும் நல்லுலகுக்கு எடுத்துக் கூறிய பெருமை அவரையே சாரும்.

எனது ஊரின் ஆளுமையொன்று இகவாழ்வை முடித்துக் கொண்டது என்ற உண்மை வேதனை தந்தாலும் அவர் வாழ்ந்த உண்மையான வாழ்க்கைக்கு பரவாழ்வில் நற்பேறு பெறுவார் என்ற நம்பிக்கை தோன்றுகின்றது. அவருடைய ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் அனைவருடனும் நானும் இணைந்து கொள்கின்றேன்.

**Mrs. Kamalini Sivanathan**
Staff Assistant
Postal Department
Batticaloa.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழலாடும் உன் நினைவோடு...

அன்புச் சோதரியே!

சொந்தப்பந்தம் யாவரையும்
சோகம் சுமக்க வைத்து
சொல்லாமல் நீ தனியே
தொலைதூரம் சென்றதேனோ!

அவனியிலே அவதரித்தாய்
அனைத்தும் பெற்று வாழ்ந்தாய்
அன்பான உன் அரவணைப்பால்
அனைவரையும் கவர்ந்து நின்றாய்

சோதனைகள் பலவற்றை
சாதனைகளாக மாற்றி நீயும்
வீறு நடை போட்டாய்
வெற்றிகளும் பல பெற்றாய்

உன் உயர்ந்த தோற்றம் போலே
குணத்திலும் உயர்ந்து நின்றாய்
உயர்கல்வி பல கற்றதனால்
பதவிகளும் பல பெற்று வாழ்ந்தாய்

பெற்ற மக்கள் அனைவரையும் பேணிக் காத்து
பெரும் கல்வி அளித்து நீயும்
அவனியில் அவர்கள் புகழ் ஓங்க
பெரும்பாடுபட்டு கடமைதனைச் செய்தாய்

பாண்டிருப்பின் மகிமைதனை முதன்முதலாய்
பாரோர் அறியும் வண்ணம்
பத்தும் பதியமும் படைத்து
பண்பான மக்களினால் பாராட்டும் பெற்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிறந்த தாய், நல்லாசிரியை, கல்வியதிகாரி
சீர் நிறை இலக்கியவாதி, சிறந்ததோர் பேச்சாளர் என்று
பெற்றிருந்த அனைத்துப் பதவியிலும்
பேரோடு புகழும் பெற்று வாழ்ந்தாய்

என்னோடும் என் குடும்பத்தோடும்
எப்போதும் அன்பாய்ப் பழகி
அருமையாய் நம் உறவை
பேணி என்றும் வாழ்ந்திட்டாய்

திருமலைப் பயணத்தைத் தித்திப்பாய் ஆக்கி விட்டு
கசப்பான உன் பிரிவை நிரந்தரமாய் ஏன் தந்தாய்?
புத்தக வெளியீடு கோயில் தொலைபேசி என்று
பெரும் பொழுது என்றுடனே உன் வாழ்வின் இறுதி வாரம்

என் வீட்டு மண்டபத்தில் கூடிக் கதைபேசி
குதூகலமாய் நாம் மகிழ்ந்திருக்க
எப்போது நீ வருவாய் என்று
நிழலாடும் உன் நினைவோடு காத்திருப்பேன் சோதரியே.

**அக்கா-திருமதி. அ. சின்னத்துரை**
(திருமதி. நீலாவணன்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளை அரவணைக்கும் மாமி!

இவ்வுலகில் அவதரித்தவர் எல்லோரும் என்றோ ஒரு நாள் மரணித்தும் போவது உலகநியதி. ஆனால் எல்லோராலும் தங்கள் மறைவு மூலம் இங்கு மிகப்பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்திச் செல்ல முடியாது. அத்தகைய ஒரு பாரிய நிரப்ப முடியாத இடைவெளியை இவ்வுலகில் ஏற்படுத்திச் சென்றவர் எங்கள் மாமி...

அவர் ஒரு பூரணமான ஆளுமை..

எங்களுக்குள் நடமாடிய ஒரு பல்கலைக்கழகம்...

அவரது நினைவலைகளை மீட்பதே ஒரு பொக்கிஷமான அனுபவம்.

அவர் ஒரு சிறந்த தாய்... சிறந்த சகோதரி... சிறந்த மாமி...

சிறந்த அம்மம்மா, அப்பம்மா... சிறந்த சம்பந்தி...

இப்படி உறவுகளிடையே மட்டுமே பல சிறப்புகள் கொண்டவர்.

குழந்தைச் சிரிப்பும், இரும்பு மனமும் கொண்ட ஒரு உறுதியான முன்னுதாரணமான பெண்மணி... பல தளங்களில் தனது பன்முக ஆளுமையை வளர்த்துக் கொண்டவர். அவருடன் பேசிக் கொண்டிருந்தால் நேரம் போவது தெரியாது. அதே போன்று அவருடன் நீண்ட தூர பயணங்களாகக் கூடிய வல்லமை உடையவர். அவருடன் நெருங்கி பேசிப் பழக கிடைத்தமையை ஒரு பாக்கியமாகவே நான் கருதுகிறேன். இலட்சத்தில் ஒருவருக்கே வாய்க்கக் கூடிய நோயில்லாத, வலியில்லாத மன உளைச்சலில்லாத அமைதியான மரணத்தைக் கூட பெறும் பாக்கியம் அவருக்கு வாய்த்தது. இறைவனின் கொடையன்றி வேறல்ல.

காலங்கள் மாறலாம். உலக நியதியில் மாற்றம் ஏற்படலாம். அனால் அவர் ஆழமாக இவ்வுலகில் பதித்துச் சென்ற சுவடுகள் மட்டும் என்றும் நிலைத்திருக்கும். பாண்டியூரின் பாண்டவர் பதியின் முச்சந்தி தனது முகவெற்றிலையை இழந்து விட்டது. அடுத்த தீப்பள்ளயத்திற்கு மட்டுமல்ல. இனி எந்த தீப்பள்ளயத்திற்குமே மாமியின் முகம் கண்டு அளவளாவி கோவில் செல்லும் பாக்கியம் எமக்கு கிடைக்கப் போவதில்லை!

அவரின் ஆத்மா நித்திய சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**Dr.காசுபதி ஜெயசுதன்**
பூம்புகார்,
மட்டக்களப்பு.

- ஓம் சாந்தி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடாவில் மகனின் பட்டமளிப்பு விழாவின் போது...



குடும்பத்தினருடன் சந்தோஷமான தருணத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகம் படைக்கின்ற புலமை இன்று தூங்கிற்றே...

"குடம்பை தனித்தொழிய
புள்பறந்தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு" (குறள்)

புகழ்பூத்த எழுத்தாற்றல் புனிதவதி
தக்கவைக்க வில்லையே
தரணியில் உங்கள் உயிரை
எக்கணம் கண்டாலும்
அக்கணம் அகலும்
உங்கள் புன் சிரிப்பு

அறிவொடு ஆற்றல் நல்
ஆங்கில அறிவுப் புத்தக
ஆய்வுத் திறன் அத்தனையும்
தூங்கி நெடுதுகில் கொள்கிறதே
நீண்ட பெரு உருவம்
பாண்டவர் பூமியின் விழாக்காலத்தே
படுக்கை கொண்டதென்ன?

ஆண்டுகள் பல உங்களோடு
தேவைக்கேற்ப கதைபேசி
திருப்தி அடைந்துள்ளேன்
அறிஞர் பலர்பூத்த அரங்குகளில்
அலங்கரிக்கும் உங்கள் தமிழ்
அணிநடை அலங்காரம்
கண்டோம் கேட்டோம்
கருத்தாளம் மிக்கதுவாய்

நூல் அறிமுக விழாவென்றால்
ஆல்போல் விரிந்திருக்கும்
விமர்சன விழுமியங்கள்
பால்குடிப் பிள்ளை போன்ற
பக்குவச் சிரிப்பொலிக்கும்,

புத்தகம் படைக்கின்ற
புலமை இன்று முடங்கிற்றே
தேங்கிக் கிடக்கிறதே உங்கள்
எழுத்தில் இன்னும் சிலதேவைகள்
இன்று தூங்கி விட்டீர்களே
அம்மா நெடுதுகில்

காண்பவன விழாவில்
கண்டமுகம் அன்று
கடந்த செவ்வாய்க்கிழமை
கண்டேனே திரௌபதி மண்டபத்தில்
"வணக்கம் ரீச்சர்" என்றேன்
மலர்ந்த முகத்துடன்
பக்கத்தில் வந்தால்தான்
பழகிய முகம் தெரிகிறது என
பக்குவமாய் உரைத்த வார்த்தை
என் காதுகளில் இன்னும்
பாங்காக ஒலிக்கிறதே.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ்வுலகு (குறள்)
நாளை நமக்கென்று நமஸ்கரித்து
சாந்தியடைய பிரார்த்திக்கும்

**பூவை சரவணன் நான்**

*ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் தாயார் எல்லோரையும் விட்டு என்னையும் விட்டு நீங்கினார்.

24.09.2015 அன்று அர்ச்சுனர் தவநிலைகாக்கும் பாண்டிருப்பு பதியிலே சூரிய வெப்பத்தையும் பாராது அங்கு சென்று வந்தேன் அப்பொழுது எனக்கொரு விஷேச நினைவு என்னை 1981ம் ஆண்டு தொடக்கம் ஆதரித்த லோகிதராஜா அன்னையார் வீட்டுக்குப் போக தோன்றியது. என்னுடன் வந்தவர்கள் வீடுபோக ஆட்டோ தேடினர். அவர்களுடன் நானும் வீடு போய் விட்டேன். அன்று மாலை செய்தி வந்தது. எனது அம்மா போய் விட்டார் என்று இரவோடு இரவாகப் பிரேதம் அங்கு தங்க முடியாத நிலையில் தீப்பாய்வதற்கு முன்னர் பிரேதம் அங்கிருக்க முடியாது கொண்டு சென்றனர் அம்பாறை மலர்ச்சாலைக்கு. எங்கள் அருட்சகோதரர்.மத்தியு நல்ல ஆசிரியை என்றார், நல்ல நிர்வாகி என்றார், நல்ல என்று நிறையச் சொன்னார்.

ஆனால், எனது நெஞ்சுபடபடப்போடு பின்னோக்கிப் பார்த்தது. நான் 17 வயது சிறுமியாக கார்மேல் பாத்திமா கல்லூரியில் அருட்சகோதரி. சிசிலியாமேரியின் ஆதரவில் பள்ளிக்கூடத்தில் சில சேவைகளைச் செய்து கொண்டிருந்தேன். என்னுடைய செயற்பாடுகள் பள்ளிக்கூடத்தைச் சுற்றி மட்டுமல்ல பெரிய பெரிய ஆசிரியர்கள், கல்விக் கந்தோர் அதிகாரிகள் எல்லோருக்கும் என்னை நன்கு தெரியும். இருந்தாலும் சிறுவயதில் அன்னையை இழந்த நான் எனது 18ஆவது வயதில் தந்தையையும் இழந்தேன். தந்தை ஒரு பிரதான உத்தியோகத்தர். கொழும்பிலே இருந்த துறைமுக அல்லது Port என்றழைக்கப்பட்ட ஒரு பெரிய கந்தோரில் அது நடந்தது. 1983 இல் அம்மாவாக ஓடி வந்தார் லோகிதராஜா.

என் கண்களை முந்தானையால் துடைத்தார். எனது நீளமான தலை முடியைக் கோதினார். மகளே மகளே எனஅழுதார். ஏதேதோ கூறினார். இப்போது அது என் காதுகளில் இல்லை. என் மனதில் அவள் அரவணைப்பு இருந்தது. இப்போது அவள் என் தாய் சிறிது சிறிதாய் அவரைப் பார்த்தேன். நல்ல விளையாட்டு வீரர் உயரமான தோற்றம். நல்ல நடை எங்கள் அதிபர் நடையைப் போன்று கம்பீரமானது. விளையாட்டுப் போட்டியில் அவர் நடுவராக கடமையாற்றியுள்ளார்.

அப்போது உவெஸ்லிக் கல்லூரியில் உயர் இடத்தில் பணிபுரிந்தார். அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் விளையாட்டுப் போட்டி நடத்துவார். தேனீர் அருந்த Conventக்கு வருவார், என்னை தேனீர் கொணர்ந்து தரக் கேட்பார். மகள் கொடுக்கும் தேனீரில் அம்மா நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவை காண்பார். தேனீர் நன்றாக இல்லாவிட்டாலும் மகள் தந்த தேனீர் என்பார். பின்னர் அவர் பாத்திமாக் கல்லூரிக்கு வந்தார். ஆண்கள பகுதியில் வேலை என்றாலும் பெண்கள் பகுதிக்கு வருவார். கிறேஸ் என்றே அழைப்பார். அவரை பார்த்ததும் ஓடிக் கட்டியணைப்பேன். அம்மா என்பேன். பிள்ளைகளுக்கு பழக்குவார். நாடகமாடிக் காட்டுவார். சரஸ்வதிப் பூசையை அவரே நடத்துவார். ஆனால் எங்கள் கோயிலுக்கும் அவர் வருவார். அருட்சகோதரிகளுடன் மரியாதையாகப் பழகுவார். சிலர் அவருடைய ஆசிரியர்கள், சிலர் அவரது மாணவிகள். எங்கள் கோயில் செபங்களையும் அவர் சொல்லுவார்.

பாரபட்சம் காட்டி நடக்கமாட்டார். விளையாட்டுப் போட்டியில் நடுநிலைமை வகிப்பார். எனக்கு இன்னும் பிடித்தது, அவரது கம்பீரமான குரல். அவர் மேடையில் பேசும் பேச்சைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம். பேசிக்கொண்டே இருப்பார். புத்தகம் இருக்காது, பேப்பர் இருக்காது பாண்டிருப்பு கோயில் பற்றிப் புத்தகம் எழுதினார். புத்தக வெளியீடு உவெஸ்லியில் நடைபெற்றது நானும் சென்றேன். பெரியோர் அவரது புத்தகம் பற்றிப் பெருமையாகப் பேசினர். எங்கள் அதிபர் பள்ளிக்கூடத்தில் அவருக்கு உயர்தரத்திற்கு மாணவர்களை சேர்க்கும் பொறுப்பைக் கொடுத்தார். அதையும் அவர் சிறப்பாக செய்து முடித்ததாக கூறினார். பின்பு லோகிதராஜா அம்மாவின் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் அவர்களை நான் என் தம்பி, தங்கைகளாகக் கண்டேன். அவர்களிடம் விசேட அன்பு, விசேட மதிப்பு எனக்கு. சோபனா, சுபோசனா, றுக்சனா, பிரசாந், சோபனா, சுபோசனாவின் பிள்ளைகள் என் பிள்ளைகள் ஓடிவருவார்கள்.

வருடந்தோறும் டிசெம்பர் மாதத்தில் என் பிறந்தநாள் வரும் முதல் நாளே எனக்கு அம்மா லோகிதராஜாவிடமிருந்து ஒரு சேலை அதை பிறந்தநாளில் உடுத்திக் கோயிலுக்குபோகக் கூறி ஒரு செய்தியும் வரும் மறக்க முடியாத அன்பு. இளமையில் தாயை இழந்த எனக்கு அன்பு என்றால் லோகிதராஜா அம்மா என்று காட்டினார். அவர் தரும் பொருட்கள் கட்டியணைத்தது மறக்க முடியாத ஒன்று.

மறக்க முடியாத நினைவுகள் கண்ணீர் வரும் நினைவுகள் அன்று அந்தப் பெட்டியில் அசைவற்றுக் கிடந்தசடலம் அருகில் வந்த மூன்று சகோதரிகள் கையைத் தடவிய பிரசாந் அம்மாவில் கண்களைப் பதித்த மனக்கண் என்றும் என்றும் என்றும் மறவாது.

*பெறாமகள்* - **செபஸ்ரியன். ஜோசப் கிறேஸ்**

கமு/கமு/கார்மேல் பாத்திமா தேசியகல்லூரி

ஆய்வுகூட உதவியாளர்.

13-10-2015

கல்லூரி தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவஞானத் திரு அகவல்

**(ஔவையார் அருளியது)**

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்து அழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரும் புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகனே!

இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்து அருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்
பொருந்தவே வந்துஎன் உளந்தனில் புகுந்து

குருவடிவு ஆகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்து எனக்கு அருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என்செவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக்கு அருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலம்ஒரு நான்கும் தந்து எனக்கு அருளி
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் அடைப்பதும் காட்டி
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறாதாரத்து அங்கிச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுவரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுந்து அறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி அதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழும்பும் கருத்து அறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல் சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முகச் சூக்கமும்
எண்முகமாக இனிது எனக்கு அருளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப்படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
திருத்தி முத்தி இனிது எனக்கு அருளி
என்னை அறிவித்து எனக்கு அருள்செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி என்செவியில்

எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்பு உள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கருத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்துத்

தத்துவ நிலையைத் தந்து எனை ஆண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே.

*- தத்துவஞானத் திரு அகவல் முற்றிற்று -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி தேவியின் புகழ்

01. வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம் பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள்

02. மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமேவடி வாகிடப் பெற்றாள் - வெள்ளை

03. வஞ்சகமற்ற தொழில் புரிந்துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வமாவாள்
வெஞ்ச மீர்க்குயி ராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர் தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்
வீர மன்னர் பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடும் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம் - வெள்ளை

04. தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
தீமை காட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வமென்ற கருத்துடையோர்கள்
உயிரினுக்குயி ராகிய தெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்

எசம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்

கை வருந்தி உழைப்பவர் தெய்வம்

கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம் - வெள்ளை

05. செந்தமிழ் மணி நாட்டிடை யுள்ளீர்

சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!

வந்தனம் இவட்கே செய்வ தென்றால்

வாழி யஃதிங் கெளிதன்று கண்டீர்!

மந்திரத்தை முணுமுணுத் தேட்டை

வரிசை யாக அடுக்கி அதன்மேல்

சந்த னத்தை மலரை இடுவோர்

சாத்திரம் இவள் பூசனை யன்றாம் - வெள்ளை

06. வீடு தோறும் கலையின் விளக்கம்

வீதி தோறும் இரண்டொரு பள்ளி

நாடு முற்றிலும் உள்ளன பூர்கள்

நகர்க ளெங்கும் பலபல பள்ளி

தேடுகல்வி யிலாததொ ரூரைத்

தீயி னுக்கிரை யாக மடுத்தல்

கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை

கேண்மை கொள்ள வழியிவை கண்டீர் - வெள்ளை

07. ஊணர் தேசம் யவனர்தந் தேசம்

உதய ஞாயிற் றொளிபெறுநாடு

சேண கன்றதோர் சிற்றம்படிச் சீனம்

செல்வப் பார சிகப்பழந் தேசம்

தோண லத்த துருக்கம் மிசிரம்

சூழ் கடற்கப் புறத்தினில் இன்றும்

காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்

கல்வித் தேவியின் ஒளிமிகுந் தோங்க - வெள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்

நல்ல பாரத நாட்டிடை வந்தீர்!

ஊனம் இன்று பெரிதிழைக் கின்றீர்!

ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்!

மானமற்று விலங்குக ளொப்ப

மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ?

போன தற்கு வருந்துதல் வேண்டா

புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர் - வெள்ளை

09. இன்னுறுங் கனிச் சோலைகள் செய்தல்

இனிய நீர்த்தண சுனைகள் இயற்றல்

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்

ஆலயம் பதி னாயிரம் நாட்டல்

பின்னருள்ள தருமங்கள் யாவும்

பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்

அன்ன யாவினும் புண்ணியம் கோடி

ஆங்கோர் ஏழைக் கெழுதித் தறி வித்தல் - வெள்ளை

10. நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!

நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!

அதுவு மற்றவர் வாய்ச் சொல் அருளீர்!

ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்!

மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்

வாணி பூசைக் குரியன பேசீர்!

எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்

இப்பெருந்தொழில் நாட்டுவம் வாரீர்! - வெள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவெம்பாவை

# திருவண்ணாமலையில் அருளியது

(சக்தியை வியந்தது)

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னை
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போ திப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழைப்பீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
பத்தடியோம்புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடலோர் எம்பாவாய்

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான்ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேடபச் சிவனென்றே வாய் திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறே
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடலோர் எம்பாவாய்

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையேயெமக் கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலோ மேலோர் எம்பாவாய்

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒரு பால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்ட ருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடி யோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகை யெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமை யேலோர் எம்பாவாய்

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதிதிறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்ப
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேதையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடி மேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம் பபலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமப் பொற்பாதத் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நாங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாப்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்பரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்குஅப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுக்காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறுறெமக் கேலோர் எம்பாவாய்

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்

- திருச்சிற்றம்பலம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

## (ஆனந்த மனோலயம்)

## திருத்தில்லையில் அருளியது

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுநல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன் அம் மானைப்பாடி
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாம்.

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாம்

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே.

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவக என்றுவாழ்த்தித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவெகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடற்பொற் சுண்ணம் இடித்து நாமே.

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமே லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே.

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடற்பொற் சுண்ணம் இடித்து நாமே.

வாட்டங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிசொல்லி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே.

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே.

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்க கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி மாணிக்கக் கூத்தன்னை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம் வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இதழுந் துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானால் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலரற்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சேவகம் ஏய்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடி
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

அயன்தலை கொண்டுசென் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே.

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டு நின்றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்து நாமே.

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினாருக்குச்
சோதியு மாய்இரு ளாயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினாருக்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினாருக்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

- திருச்சிற்றம்பலம் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

## 31 நாட்களம்மா, நீங்களில்லாத
## இந்த உலகில் நாங்கள் வாழப்பழகி...

இறப்பும் பிறப்பும் வாழ்க்கையின் நியதியானாலும் இந்தக் கண்ணீர் நாட்களில் எங்களோடு துணை நின்று

அணைத்து ஆறுதல் தந்து

கைபிடித்து வழிகாட்டி

துயர் துடைத்து

உணவும் தந்து

அனைத்து விடயங்களிலும் உறுதுணையாக இருந்த, இருக்கின்ற எங்கள் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள்.

கூடவே அந்த ஞாயிறன்று இரங்கலுரையிலும் பங்கெடுத்து கண்ணீர் அஞ்சலிகளும் தந்து பிரார்த்தனைகளும் செய்த அனைவருக்கும் எங்களது நன்றிகள்.

- நன்றி -

**குடும்பத்தினர்**

## The very first month without our mother
## in this lonely world...

Thank you so much to the relatives and friends.
who gave their shoulders for us to lean on
who picked up the pieces to make our lives smooth
who talked about amma and consoled us immensely

Thank you from the bottom of our hearts
without your presence, words and actions, it would have been very difficult to face the world.

**- Family -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்விற்கு

தூய்மையாக இருப்பதும்
மற்றவர்களிற்கு நன்மை
செய்வதும் தான் எல்லா
வழிபாடுகளினதும் சாரமாகும்.
தீமை செய்பவன் தனக்கும்
மற்றவர்களுக்கும் தீமை செய்கிறான்.
நன்மை செய்பவன் தனக்கும்
பிறர்க்கும் நன்மையே செய்கிறான்.
உடலும் உள்ளமும் தூய்மையின்றி
கோயிலுக்கு போவதும் இறைவனை
வழிபடுவதும் பயனற்றதாகும்.
நேர்மையுடனும் தைரியமாகவும்
பக்தி சிரத்தையுடனும் வாழ்ந்தால்
இறைவனை அடைவது உறுதி.



நன்னெறியே இறைவணக்கம் -

- சுவாமி விவேகானந்தர் -

கோல்டன் அச்சகம், கல்முனை, 067-2223939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org